வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வாரமலர் ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 77 | பக்கங்கள் : 16

# ஏப்ரல் 25இற்கு பின்னர் உள்ளூராட்சித் தேர்தல்!

## தேர்தல் ஆணையாளர் நாயகம் தகவல்



கொழும்பு, மார்ச் 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2023ஆம் ஆண்டில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலே தற்போது நடத்தப் படவுள்ளது.

அந்த தேர்தலுக்கு சுமார் 161

15

## ஏப்ரலில் வருகிறார் மோடி!

### உறுதிப்படுத்தியது அரசு

கொழும்பு, மார்ச் 16

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது பல புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## அடுத்த வாரத்தில் இலங்கைக்கு வரும் ஐரோப்பிய ஒன்றியக் குழு!

கொழும்பு, மார்ச் 16

இலங்கைக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை மீளாய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்

15


## பிள்ளையான் - வியாழேந்திரன் நேற்று ஒரே அணியில் சங்கமம்!

மட்டக்களப்பு, மார்ச் 16

'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய கூட்டமைப்பு நேற்று உதயமானது.

இதன் முதற்கட்டமாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகத்தினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று காலை 10 மணியளவில் மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

15





## கச்சதீவு திருவிழாவில் 8,000 பக்தர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 16

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்ற திருப்பலியுடன் நிறைவடைந்தது. இதில் சுமார் 8000 பக்தர்கள் பங்கேற்றனர்.

இலங்கை - இந்திய மக்களின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் திருச்செபமாலையுடன் கொடியேற்றம் இடம்பெற்று, சிலுவைப் பாதை, நற்கருணை பெருவிழா மற்றும் திருச்சொரூப பவனி என்பன இடம்பெற்றன.

நேற்றுக் காலை 6 மணிக்கு திருச்செபமாலையுடன் திருநாள் திருப்பலி இடம்பெற்று, திருவிழா நிறைவடைந்தது.

தமிழ்நாடு சிவகங்கை மறைமாவட்ட ஆயர் லூர்து ஆனந்தம் ஆண்டகை தலைமயில்

15

## கனடாவின் நீதி அமைச்சராக ஹறி ஆனந்தசங்கரி நியமனம்



ஒட்டாவா, மார்ச் 16

கனடா நாட்டின் நீதி அமைச்சராக ஹறி ஆனந்த சங்கரி நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கனடா பிரதமராக மார்க் கார்னி பதவியேற்றார். இந்த நிலையில் அவரது அமைச்சரவையில் ஹறி ஆனந்தசங்கரிக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தப் பதவியை வகிக்கும் முதல் தமிழ் - கனேடியர் என்ற பெருமையையும் அவர்

15

## தமிழக மீனவர் வடக்கு மீனவர்களின் வளங்களை அழிப்பது ஏற்புடையதல்ல!

### கச்சதீவில் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழக மீனவர்கள் வடக்கு மீனவர்களின் வளங்களை அழிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல என கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இலங்கை இந்திய மீனவ பிரச்னை தொடர்பாக அமைச்சர் கச்சதீவில் தமிழக

15

## பளை விபத்தில் இளைஞன் பலி!

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி - பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பளை கரந்தாய் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பளை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மகேந்திரன் நிசாந்தன் என்னும் இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்

குறித்த விபத்து நேற்றுமுன் தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து

15

## மன்னார் குரு முதல்வராக வண. தமிழ்நேசன் அடிகள்



மன்னார், மார்ச் 16

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இந்த நியமனத்தை வழங்கினார்.

மடு திருப்பதியில் ஐந்து நாட்கள் நடைபெற்ற மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானத்தின் நிறைவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது.

15

## கச்சதீவு திருவிழாவை உதாரணமாக்கி மீனவர் பிரச்னையைத் தீர்க்க முடியும்!

### ரவூப் ஹக்கீம் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 16

கச்சதீவு திருவிழாவில் இரு நாட்டு அரசாங்கங்களும் ஒத்துழைப்புடன் செயல்பட்டதைப் போன்று மீனவர் விடயத்திலும் செயற்பட்டால் குறித்த பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க முடியும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தொடர்பான செலவு தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கச்சதீவு திருவிழா தொடர்பான இந்திய ஊடக செய்தியொன்றை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை குறித்தும் விசாரணை நடத்த வேண்டும்

## அநுர அரசிடம் மனோ கணேசன் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச்.16

"அரசாங்கத்துக்கு அரசியல் இலாபம் கிடைக்கக் கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி மாத்திரமின்றி தமிழர்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்"- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பொதுவான ஆணைக் குழுவொன்றை நியமித்து ரணில் விக்கிரமசிங்கவிடமும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் ஜே.வி.பியினரிடமும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பட்டலந்த வதை முகாம் தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் வழக்கு தொடரப்பட வேண்டும். அங்கு இடம்பெற்ற கொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் ஆராய வேண்டும். எனினும், பட்டலந்த வதை முகாம் பற்றி மாத்திரம் ஏன் விசாரிக்க வேண்டும் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

1948ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்கெதிரான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. அதன் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை, இறுதி யுத்தத்தின் போது தமிழர்கள் கொல்லப்பட்டமை, குடும்பத்தோடு சென்று இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், கொழும்பில் இடம்பெற்ற கொலைகள், கடத்தல், காணாமல் ஆக்கப்படுதல் என்பன தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவை மாத்திரமின்றி சர்வதேச அளவில் பேசப்பட்ட இனப்படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எனவே, பட்டலந்த விவகாரம் தொடர்பில் மாத்திரமின்றி தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்கு அரசியல் இலாபம் கிடைக்கக் கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி மாத்திரமின்றி அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் எந்தவொரு பகுதியிலும் பயங்கரவாதமோ அல்லது அரச பயங்கரவாதமோ இருக்கக் கூடாது. விசாரணைகளுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்"- என்றார். (எ)



# முல்லையில் ஆயிரக்கணக்கான துப்பாக்கி தோட்டாக்கள் மீட்பு!

முல்லைத்தீவு, மார்ச்.16

முல்லைத்தீவு சிலாவத்தை தியோநகர் காட்டுப் பகுதியில் ஆயிரக்கணக்கான துப்பாக்கி தோட்டாக்கள் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு சிலாவத்தை தியோநகர் காட்டுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் இருப்பதாக கடற்படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து கடற்படையினரும், முல்லைத்தீவு பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சோதனையிட்டபோது உரப் பை ஒன்றை கண்டுபிடித்தனர்.

குறித்த உரப் பையிலிருந்து 1,400 ரி - 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் இந்தத் துப்பாக்கி தோட்டாக்கள் வெடிக்காத நிலையில் பழுதடைந்து இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்

கிளிநொச்சி, மார்ச்.16

புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கிய இளைஞன் ஒருவர் உயிரிழந்ததாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சூரியவெளி - நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

தேவாலயம் ஒன்றில் பணி செய்வதற்காக கடந்த 28ஆம் திகதி குறித்த இளைஞன் கிளிநொச்சிக்குச் சென்ற நிலையில் கடந்த 12ஆம் திகதி மீண்டும் வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தார்.

இதன்போது, குறித்த இளைஞன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றை கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்ற போது எதிர்த்திசையில் பயணித்த பட்டா ரக வாகனத்தில் மோதி விபத்தில் சிக்கினார்.

விபத்தில் காயமடைந்த இளைஞன் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் மாஞ்சோலை மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வவுனியாவில் கம்பரின் நினைவுதினம்






வவுனியா, மார்ச்.16

வவுனியாவில் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நினைவு தினம் நேற்றுக்காலை நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது, கம்பரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களால் கம்பர் தொடர்பான நினைவுப் பேருரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# கோப்பாய் உதயசூரியன் முன்பள்ளியில் பாலர் சந்தை



யாழ்ப்பாணம், மார்ச்.16

யாழ்ப்பாணம், கோப்பாய் உதயசூரியன் முன்பள்ளி சிறார்களின் பாலர் சந்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, சிறுவர்கள் தமது பொருட்களை ஆர்வத்துடன் சந்தைப்படுத்திய நிலையில் பலரும் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஞா. சுலக்சன் கலந்து கொண்டதுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-05)

# ரயிலுடன் இணைந்த பேருந்து சேவை இன்மையால் வடமராட்சி மக்கள் சிரமம்

வடமராட்சி, மார்ச் 16

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்துக்கு ரயில் சேவையுடன் இணைந்ததான பேருந்து சேவை நடத்தப்படுவதில்லை. இதனால், வடமராட்சியிலிருந்து ரயிலில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் அனுபவிப்பதுடன் நேர விரயத்தையும் எதிர்கொண்டுள்ளனர்.

கொழும்பு - காங்கேசன் துறை இடையே காலை, நண்பகல், இரவு ரயில் சேவைகள் நடைபெறுகின்றன. இதில் பயணிக்கும் வடமராட்சி பிரதேச மக்கள் பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு சென்று வர இணைப்பு பேருந்து சேவை இன்றி பெரும் சிரமப்படுகின்றனர்.

குறிப்பாக, இரவு நேரத்தில் கடுகதி ரயிலில் பயணிப்போர் உரிய நேரத்தில் சென்றுவர பருத்தித்துறை இ. போ. ச. சாலையால் எந்த ஒழுங்கும் செய்யவில்லை. இரவு நேர ரயிலில் கொழும்பு உள்ளிட்ட ஏனைய இடங்களுக்கு பயணிக்கும் பயணிகள் ரயில் புறப்படுவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பாகவே கொடிகாமம் பயணிக்க வேண்டியுள்ளது.

இதேநேரம், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் புகையிரதம் அதிகாலை 4 மணிக்கு கொடிகாமத்தை வந்தடைகிறது. அதில், வந்திறங்கும் பயணிகள் கொடிகாமம் பஸ் நிலையத்தில் பல மணிநேரம் காத்திருந்து காலை 6 மணிக்கு பருத்தித்துறை நோக்கி புறப்படும் தனியார் பேருந்திலேயே பயணிக்க வேண்டியுள்ளது.

அத்துடன், பருத்தித்துறை கொடிகாமம் பிரதான பாதையில் பருத்தித்துறை இ. போ. ச. சாலை சீரான ஒழுங்கமைந்த சேவையை நடத்தாமையினால் பயணிகள் தனியார் பேருந்து சேவைகளையே நம்பி இருக்க வேண்டியநிலைமை இருந்து வருகிறது.

பருத்தித்துறை - கொடிகாமம் பிரதான பாதையில் சேவையில் ஈடுபடுத்தும் தனியார் சிற்றூர்தி சேவை சங்கத்தினர் ரயில் பயணிகள் பயணக் கஷ்டங்களை தெரியாததுபோல் இருந்து வருகின்றனர்

உரிய திணைக்களங்கள், சபைகள் இந்தக் குறையை போக்க உரிய கவனம் செலுத்துவார்களா - என்று வடமராட்சி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஐ -02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், கொக்குவில் தலையாழி சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ நிறைவுநாளையொட்டி கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இதில், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள், மூத்தவர்கள் கௌரவிப்பு மற்றும் ஆண்டு சஞ்சிகை வெளியீடும் நடைபெற்றன.

# காற்றாலைத்திட்ட நிலைப்பாடு பற்றி அதானி நிறுவனம் அரசுக்கு அறிவிப்பு

## உள்ளடக்கத்தை ஆராய்ந்தே இறுதித் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 16

**இலங்கையில் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி நிறுவனம் தமது நிலைப்பாட்டை அனுப்பிவைத்துள்ளது. அதன் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்து, அரசாங்கத்தின் தீர்மானத்தை வெகுவிரைவில் சபைக்கு அறிவிப்போம்"- இவ்வாறு சக்தி வலுத்துறை அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.**



இந்தக் கருத்திட்டம் தொடர்பில் 2023. 08. 23 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியில் காணப்படும் சிக்கல்கள் குறித்து பரிசீலனை செய்யப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் காற்றாலை மின் சக்தியையும், சூரிய மின் சக்தியையும் அதிகரிப்பதற்காக இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை செய்துள்ளது.

2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் சக்தி வலுத்துறையின் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாக உற்பத்தி செய்வதற்காக மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் 484 மெஹாவாட் காற்றாலை மின்சக்தி திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்தின் முதலீட்டுடன் உற்பத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலும், இந்த ஒப்பந்தம் தொடர்பில் 6 பங்குதாரர்களுக்கும் உரிய பொறுப்புகள் மற்றும் கருமங்களை தனித்தனியாக எடுத்துரைப்பது ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாகும். 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சார திருத்தச் சட்டத்தின் பிரகாரம் போட்டி நிலை விலைமனுக்கோரலின்றி குறித்த நிறுவனத்துடன் இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

(எ)

# பட்ஜெட் பற்றாக்குறைக்காக ஐ.எம்.எவ். நிதி பயன்படுத்தப்படாது

## பிரதியமைச்சர் ஹர்ஷண தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.16

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ள அடுத்த தவணை கடன் பயன்படுத்தப் படாது. நாணய நிதியத்தின் செயல்திட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்படுமென நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியபெரும தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், 2024. 01. 01 ஆம் திகதி முதல் 2024. 09. 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை 336 மில்லியன் டொலர் கடன் தொகையை பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன், 2024.09.21 ஆம் திகதி முதல் இன்றளவில் நாணய நிதியத்திடமிருந்து 334 மில்லியன் டொலர்கள் கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2024.09.21 ஆம் திகதி முதல் இன்றளவில் நாணய நிதியத்திடமிருந்து ஒரு தவணை அடிப்படையில் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்வதற்கு இந்த கடன் தொகை பயன்படுத்தப்படாது.

3.743 சதவீதம் என்ற அடிப்படையில் கடன் தொகைக்கான வட்டி விகிதம் அறவிடப்படுகிறது. 2028 மற்றும் 2034 ஆகிய காலப் பகுதிகளில் கடன் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும் - என்றார்.

(எ)

# நான் எதற்காக தென்னக்கோனை மறைத்து வைத்திருக்க வேண்டும்

## சாகல ரத்நாயக்க கேள்வி

கொழும்பு, மார்ச்.16

முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் எனது அழுத்தம் காரணமாக காலம் தாழ்த்தப்படுவதாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டது. ஆனால், இப்போது நான் அவரை மறைத்து வைத்திருப்பதாக கூறுகின்றனர். இவை அனைத்தும் கற்பனை கதைகளாகுமென முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், இதற்கு முன்னரும் பி. பி. ஜெயசுந்தர மற்றும் காமினி செனவிரத்ன போன்றோர் மறைந்திருப்பதாகக் கூறப்பட்டது. தற்போது, தென்னக்கோன் மறைந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எனது அழுத்தம் காரணமாகவே தென்னக்கோனின் நியமனம் காலம் தாழ்த்தப்படுவதாகக் கூறினர்.

ஆனால், தற்போது நான் அவரை மறைத்து வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். இவை அனைத்தும் கற்பனைகளால் கூறப்படும் கதைகளாகும்.

நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பதில் பொலிஸ்மா அதிபரை கண்டுபிடிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றதென்றால் இதுவே இன்றைய நிலவரமாகும் - என்றார். (எ)

# மட்டு. சந்திவெளி காட்டில் ஆண் சிசு சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, மார்ச்.16

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொறக்கொட்டாஞ்சேனையில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை ஆண் சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்டதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதியில் ஆண் சிசு ஒன்று சடலமாக கிடப்பதை கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சந்திவெளி பொலிஸார் சிசுவின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

இந்த ஆண் சிசுவை பெற்றெடுத்த தாய், சிசுவை உரப்பையில் கட்டி அதனை மொறக்கொட்டாஞ்சேனை காட்டுப் பகுதியில் வீசிவிட்டு சென்றதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த சிசு நேற்றுப் பிறந்ததாகவும் சிசுவின் தாயை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# விலங்குகள் குறித்து எவ்வகையிலும் சரியான தரவுகளைப் பெற முடியாது

## வனஜீவராசிகள் திணைக்களம் சொல்கிறது

கொழும்பு, மார்ச்.16

விலங்குகள் தொடர்பில் எவ்வகையில் கணக்கெடுப்பை முன்னெடுத்தாலும் சரியான தரவுகளை பெற்றுக் கொள்ள முடியாது. எவ்வாறிருப்பினும், எந்தெந்த பிரதேசங்களில் எந்த விலங்குகள் அதிகளவில் வாழ்கின்றன என்பது குறித்த அனுமானத்தை எட்டலாம். இது விலங்குகள் முகாமைத்துவத்துக்கு உதவும் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விவசாய திணைக்களத்தின் தலைமையில் விலங்குகள் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. வனஜீவராசிகள் திணைக்களமும் அதற்கு ஒத்துழைப்பை வழங்குகிறது. எனினும், இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கணக்கெடுப்பின் ஊடாக விலங்குகள் தொடர்பான பல்வேறு தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சரியான எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், எந்தெந்த விலங்குகள் எந்தப் பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுகின்றன என்பது உள்ளிட்ட சில அனுமானங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வகையில் கணக்கெடுப்புக்களை முன்னெடுத்தாலும் சரியான தரவுகளைப் பெறுவது கடினமாகும். இந்தக் கணக்கெடுப்பில் பெற்றுக் கொள்ளப்படும் தரவுகளுக்கமைய விலங்குகள் முகாமைத்துவ வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக அமையும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டலந்த சித்திரவதை முகாம் உருவான காரணத்தை ஆராய்க

## நளின் பண்டார அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச்.16

**"பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பில் மட்டுமின்றி அந்த முகாம் உருவானமைக்கான காரணங்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்தி உண்மையைக் கண்டறிய வேண்டும்"- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.**

மக்கள் விடுதலை முன்னணியால் 1988 மற்றும் 1989 காலத்தில் கொல்லப்பட்ட சகல தரப்பினருக்கும் நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதி வழங்கல் ஒரு தலைப்பட்சமாக அமையக் கூடாது எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து சபை முதல்வர் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். அங்கு நடந்த சம்பவத்தை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால், பட்டலந்த சம்பவம் ஏன் உருவானது என்ற பிரச்னை உள்ளது. 88 மற்றும் 89 ஆம் ஆண்டு காலத்தில் பயங்கர வாதம் இருந்தது. அதனால், இரு தரப்பிலும் 60 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட் டனர்.

கிராம உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், பொலிஸார் மிலேட்சத்தனமாக கொல்லப்பட்டனர். இதனால், பட்டலந்த தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதுடன், 88 மற்றும் 89 காலப்பகுதியில் கொல்லப்பட்ட பலரின் குடும்பங்களின் பிள்ளைகள் உள்ளனர். உங்களின் இராணுவ அமைப்பிலும் அதனுடன் தொடர்புடையவர்கள் இருக்கின்றனர்.

இந்த வரலாறு மூடப்பட்டிருந்தது. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மறுநாளே நினைவுக்கு வர வேண்டிய விடயம் அல்ஜெசீராவில் கூறப்பட்டதை தொடர்ந்தே இது நினைவுக்கு வந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் தேடியறிந்து அது தொடர்பில் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்.

இது ஒரு பக்கச்சார்பாக இருக்கக் கூடாது. கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியால் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் இன்னும் எமது ஊர்களில் இருக்கின்றனர். பணிக்குச் சென்ற காரணத்தால் கொல்லப்பட்டவர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். இதனால் பட்டலந்தவுக்கும் அப்பால் பரந்தளவான விசாரணைகள் நடக்கப்பட வேண்டும். உண்மையைத் தேடியறிய வேண்டும். பட்டலந்தவுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது" -என்றார். (எ)



# இப்தார் நிகழ்வில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச்.16

முஸ்லிம்களின் புனித ரமழான் நோன்பு மாதத்தை யொட்டி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு நடைபெற்றது. (எ)

# தொழிலாளர் சம்பளம் குறித்து முதலாளிமார்களுடன் பேச்சு

கொழும்பு, மார்ச்.16

தோட்டத் தொழிலாளர்களின் 1700 ரூபாய் சம்பளம் தொடர்பில் தோட்ட முதலாளிமார்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுவோம் என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.



சில முதலாளிமார் தனிப்பட்ட ரீதியில் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளதுடன் பொது இணக்கப்பாடொன்றை எடுப்பதற்கு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் தற்போதைய சம்பளம் போதுமானதல்ல. அது அதிகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் வரவு - செலவுத் திட்டத்தில் அதனை வலியுறுத்தியுள்ளார். இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் நாம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம். அதே போன்று, தனியார்த்துறை ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரித்துள்ளோம்.

அந்த வகையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாயாக அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

# பழுதடைந்த பழங்கள் விற்பனை 50,000 ரூபாய் அபராதம் விதிப்பு

கல்முனை, மார்ச்.16

மனித பாவனைக்கு உதவாத சுகாதாரமற்ற பழுதடைந்த பழங்களை விற்பனை செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 50,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

பழுதடைந்த பழங்கள் விற்பனை தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவர் நேற்று முன்தினம் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சில பழ விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பழுதடைந்த பழங்கள் மீட்கப்பட்டன.

மேலும், கடந்த வியாழக்கிழமை அன்று கைப்பற்றப்பட்ட மனித பாவனைக்கு உதவாத சில பொருட்களையும் சேர்த்து நேற்று முன்தினம் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக சமர்ப்பித்த வேளை 5 விற்பனை நிலையங்களுக்கு 20,000 ரூபாயும் இரண்டு கடைகளுக்கு தலா 10,000 ரூபாயும் மேலும் இரண்டு கடைகளுக்கு தலா 5,000 ரூபாயும் என மொத்தமாக 50,000 ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டது. (எ- 01)

# பெண்களை கட்டுப்படுத்தும் தடைகள் உடைக்கப்படும்

## பிரதமர் ஹரிணி உறுதி

கொழும்பு, மார்ச்.16

தேசிய அபிவிருத்தியில் பெண்கள் வகிக்கும் முக்கிய பங்கை உணர்ந்து, பொருளாதாரத்தில் பெண்கள் முழுமையாகப் பங்கேற்பதைக் கட்டுப்படுத்தும் தடைகளை உடைப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் மகத்தான பங்களிப்பு இருந்தபோதிலும், கட்டமைப்பு தடைகள் பொருளாதாரத்தில் அவர்களின் முழு பங்களிப்பையும் மட்டுப்படுத்தியுள்ளன.

பெண்கள் வணிகத் தலைவர்கள், தொழில்முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களாக முன்னேறக்கூடிய ஒரு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் இந்தத் தடைகளை உடைக்க எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

பெண் தொழில்முனைவோருக்கு உகந்த சூழலை உருவாக்குவதன் மூலமும், குழந்தை பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு மற்றும் பெண்களின் பொருளாதார பங்களிப்பைக் கட்டுப்படுத்தும் மாற்றுத் திறனாளி சேவைகள் போன்ற துறைகளை வலுப்படுத்துவதன் மூலமும் பெண்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது"- என்றார்.

# 5 வருடங்களாக தேடப்பட்டு வந்த நபர் சம்மாந்துறையில் சிக்கினார்

சம்மாந்துறை, மார்ச்.16

5 வருடங்களாக அக்கரைப்பற்று பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாரால் 2020 ஆண்டு முதல் கடந்த 5 வருடங்களாக திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் திறந்த பிடியாணை மூலம் தேடப்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த சந்தேக நபர் சம்மாந்துறை பிரதேசத்தில் நடமாடுவதாக சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திருமலையில் தமிழ் அரசு கட்டுப்பணம் செலுத்தியது

திருகோணமலை, மார்ச்.16

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக திருகோணமலை மாவட்டத்துக்கான கட்டுப்பணம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தலைமையில் தேர்தல் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை செலுத்தப்பட்டது.

திருகோணமலை மாநகர சபை, மூதூர் பிரதேச சபை, குச்சவெளி பிரதேச சபை, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை, வெருகல் பிரதேச சபை, கிண்ணியா பிரதேச, தம்பலகாமம் பிரதேச சபை ஆகிய சபைகளில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது, செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவித்த குகதாசன் எம். பி. "இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கடுமையாக உழைப்பதன் மூலமாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவோம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.03.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், பங்குனி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

## புலம்பெயர் சமூகத்தால் இப்போது முடியுமா?

ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் நீத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்றார். ஒரு புலம்பெயர் தமிழர் அரசியல்ரீதியில் அடைந்திருக்கும் அதி உச்சமான பதவியாக இதனை குறிப்பிடலாம். இது ஒட்டுமொத்த ஈழத் தமிழருக்குமான பெருமை போன்று வர்ணிப்போரும் உண்டு - அதே வேளை ஒரு ஈழத் தமிழ் சாதனையாகவும் நோக்குவோரும் உண்டு. பொதுவாக ஒருவரது தனிப்பட்ட வெற்றியை ஒட்டுமொத்த சமூகத்தின் சாதனையாக காண்பிக்கும் போக்கு தமிழ்ச் சூழலில் அவ்வப்போது தலைநீட்டுவதுண்டு. இவ்வாறான போக்கு ஏனைய சமூகங்களில் குறைவு - முக்கியமாக மேற்குல சமூகத்தினர் மத்தியில் அவ்வாறான போக்கு இல்லை.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலத்தில் போர்க் குற்றவாளிகளான ராஜபக்ஷக்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்போவதான ஒரு பிரசாரம் புலம்பெயர் சூழலில் பிரதான விடயமாக பேசப்பட்டது. சர்வதேச நீதிமன்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் - அருகில் சென்றுவிட்டதாகவும் ஏராளமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழர்களுக்கான நீதி தேடும் அரசியல் முன்னெடுப்புகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஹரி ஆனந்தசங்கரி ஓர் அதிஉயர் பதவியை அடைந்திருக்கின்றார். இப்போது அவர் கனடிய அரசாங்கத்தை வழிநடத்தும் ஓர் உயர் குழாமின் அங்கம். கனடா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையெழுத்திட்டிருக்கும் நாடுகளில் ஒன்று. 1998ஆம் ஆண்டு, ரோம் சமவாயத்தை ஏற்றுக்கொண்ட கனடா, 2000ஆம் ஆண்டு, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களை அங்கீரித்த முதல் நாடு என்னும் தகுதியை பெற்றுகொண்டது.

ரோம் சமவாயத்தில் கையெழுத்திட்டிருக்கும் ஒரு நாடானது, உலகில் எப்பாகத்திலும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக நம்பினால், அதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும். இந்த விடயத்தை ஹரி ஆனந்தசங்கரி ஒரு சர்வதேச விவகாரமாக முன்னெடுக்க முடியும். அதற்கான பதவிநிலை அதிகாரம் இப்போது அவருக்குண்டு. ஹரி ஆனந்தசங்கரி செய்வாரா? அவரை செய்யுமாறு கனடிய புலம்பெயர் சமூகம் நிர்ப்பந்திக்கும் ஆற்றலுடன் இருக்கின்றதா?

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கனடா இந்த விடயத்தை கொண்டு சென்றால், ராஜபகஷக்களும் இறுதி யுத்தத்தில் பங்குகொண்ட இராணுவத் தளபதிகளும் வெளிநாடுகளில் வைத்து கைது செய்யப்படுவார்கள். கனடிய புலம்பெயர் சமூகம் இதுவரையில் ஜஸ்டின் ரூடோவை பொங்கல் விழாவுக்கு அழைத்து மகிழும் சமூகமாகவே இருந்திருக்கின்றது - அதே போன்று, கனடாவில் இருக்கின்ற ஜனநாயக இடைவெளியில் கிடைக்கும் கருத்து வெளிப்பாட்டு உரிமையை பயன்படுத்தி புலிகளின் சின்னாங்களை சுமப்பதன் ஊடாக தங்களை தமிழ்த் தேசியத்திற்கு நெருக்கமான சமூகமாக காண்பித்துக் கொண்டது.

ஏனைய நாடுகளிலும் இதுதான் நடந்தது. இதற்கப்பால் இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் அரசியல் லொபியை புலம்பெயர் அமைப்புக்களால் செய்ய முடிந்ததா என்றால் பதில் பூச்சியமாகும். அவ்வாறான புலம்பெயர் லொபியில் பலமான நிலையில் புலம்பெயர் சமூகம் இருந்திருந்தால், இலங்கை அரசு இந்தளவு துணிவாகவும் உறுதியாகவும் சர்வதேச கடப்பாடுகளை தொடர்ந்தும் இலகுவாக புறக்கணித்து செயல்பட்டிருக்காது.

இப்போதாவது புலம்பெயர் சமூகத்தினால் முடியுமா? - என்னும் கேள்விதான் தற்போது மேலேழுந்திருக்கின்றது.

ஒரு கனடிய அரசியல்வாதியாக இருப்பதால் ஹரி ஆனந்தசங்கரியும் அவரது குடும்பமும் நன்மையடையலாம் - அதற்கப்பால் அவரது பதவிக்கு எந்தப் பெறுமதியும் இல்லை. ஆனால் சர்வதேச அரங்குகளில் ஈழத் தமிழருக்கான லொபிக்கு அவர் தலைமை தாங்குவாரானால், அது சமூகத்திற்கான பெருமையாகும். ஹரி ஆனந்தசங்கரி ஒரு சாதாரண கனடிய அரசியல்வாதியா - அல்லது. ஈழத் தமிழர்களுக்கான கனடிய அரசியல்வாதியா? இந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விடயம் முடியவில்லையானால் - அது இனி ஒரு போதும் நடக்காது. எதிர்காலத்தில் இது போன்ற சுலோகங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றும் பணிகளை அனைவரும் கைவிட வேண்டும்.

# 2028ஆம் ஆண்டுகூட எம்மால் கடனை அடைக்க முடியாது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.16

முன்னைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை வைத்துக் கொண்டும், அதன் வழியில் சென்றும் எம்மால் 2028 இல் கடனை அடைக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2025 வரவு - செலவுத் திட்டத்தின் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பிணை முறிப் பத்திரதாரர்கள் மற்றும் இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட அரசாங்கம் தயாராகி வருகிறது. 2028 இல் எம்மால் கடனை அடைக்க முடியுமா? என்பதை இது தீர்மானிக்கும். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், புதிய கடன் ஸ்திரப்படுத்தல் திட்டத்துக்குச் செல்வதாகவும், புதிய ஐ. எம். எவ். திட்டத்துக்குச் செல்வதாகவும் கூறியது. கடந்த அரசாங்கம் செய்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு நாட்டுக்கு பல பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளது. தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தின் கொள்கையிலேயே செயல்படுகின்றது. எமது நாடு நிலையான கடன் சுழற்சியில் இல்லை. வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பில் ஆராய வேண்டும்.

இவை பொய்யான புள்ளிவிவரங்களை முன்வைத்து அரசியல் இலாபங்களைப் பெற முயற்சிக்கும் விடயங்கள் அல்ல. எனவே, கடந்த அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட தற்போது காணப்படும் இந்த ஐ. எம்.எவ். உடன்படிக்கையை இரத்து செய்யுமாறும், மக்களை ஏமாற்றி முன்னெடுத்து வரும் இந்த வேலைத்திட்டத்தை மாற்றியமைத்து, புதிய இணக்கப்பாட்டை எட்டுமாறும் சஜித் கோரிக்கை விடுத்தார்.

மேலும், 2028 ஆம் ஆண்டு வரை இதற்காக காத்திருக்க வேண்டாம். 1975 இல் இருந்து 75 ஐ. எம். எவ். உடன்படிக்கைகளை பகுப்பாய்வு செய்யும் போது, இந்த இணக்கப்பாடுகளில் 41 வீதம் இணக்கப்பாடுகள் முதல் தடவையிலேயே வெற்றியடைந்துள்ளன. 59 வீத இணக்கப்பாடுகள் தோல்வியடைந்துள்ளன. எமது நாடு இந்த வெற்றி கண்ட 41வீத இணக்கப்பாடுகள் நிலையை எட்ட வேண்டும் என வாழ்த்துவதாகவும், இவ்வாறே தொடர்ந்தால் 2028 இல் எமது நாடு பெரும் சிக்கலுக்குள்ளாகும் எனவும் சஜித் தெரிவித்தார்.

(எ)

## கூரிய ஆயுதங்களால் தாக்கி இரு சகோதரர்கள் கொலை!

கொழும்பு, மார்ச்.16

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெஹெர கொடெல்ல பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இரு சகோதரர்கள் கொலை செய்யப்பட்டதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இரண்டு சகோதரர்களும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

23 மற்றும் 24 வயதுடைய இருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(எ)

## கஞ்சா எண்ணெய்யை விடுவித்த சுங்கப் பரிசோதகர் பணி நீக்கம்!


கொழும்பு, மார்ச்.16

3 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய கஞ்சா எண்ணெய் பொதியை விடுவித்த சுங்கப் பரிசோதகர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டு, பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்கப் பணிப்பாளருமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து மாலபே பகுதியில் உள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்ட 3 கிலோ 200 கிராம் கஞ்சா எண்ணெய் பொதியை சுங்க பரிசோதகர் விடுவித்ததாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சுங்க பரிசோதகர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகள் உருவாக்கும் வாழ்க்கை!

தென்காசி கணேசன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே, 'யாதும் ஊரே... யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த கருத்தை உலகுக்கு அளித்தனர் நம் முன்னோர்கள். அப்படி இருக்கும்போது, இன்று அண்டை வீட்டில் இருப்பவரையே யார் என்று தெரியாமல் நாம் வாழ்ந்து வருகிறோம். வீட்டின் முன்பகுதியில் திண்ணையில் உட்கார்ந்து அக்கம்பக்கத்தாரும் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தவர்கள் நம் முன்னோர்கள். தனித்தனியாக வீடுகள் இருக்கும்போதுகூட நாம் அனைவருடனும் பேசி வந்தோம். அடுக்கு மாடிகள் ஆனவுடன், அடுத்த வீட்டுக்காரர் யாரென்று நமக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

உறவுகள், நட்பு ஆகியவை விலைமதிப்பு இல்லாதவை. அவற்றின் அருமையை அவற்றை இழந்த பின்தான், நாம் உணரப் போகிறோம்.

தகவல் தொடர்பு வளர்ச்சியடைந்து மிக உயர்ந்த நிலையை எட்டிவிட்டது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அது இரு பக்கமும் கூரான கத்தி போன்றது. இன்றைய தலைமுறை அக்கறை காட்ட வேண்டிய விஷயம் தகவல் தொடர்பை ஒழுங்காக, சரியாகப் பேண வேண்டும் என்பதுதான்.

பேசுவது என்பது ஒரு கலை. பேசாதிருப்பது மற்றொரு கலை. எங்கே பேச வேண்டும் எப்படிப் பேச வேண்டும் எங்கே பேசக் கூடாது, எப்படிப் பேசக் கூடாது என்பதில்தான் வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது என்பதே உண்மை.

இதை அறியாமல் தாங்கள் பேசும்முறைதான் சிறந்த தகவல் தொடர்பு என இன்றைய இளைய தலைமுறையினர் நினைத்துக் கொள்வது ஆபத்தான விஷயம்.

பெற்ற தாய், தந்தையிடம், கற்றுத்தரும் ஆசிரியரிடம், மனைவியிடம், கணவனிடம், அதிகாரிகளிடம் எப்படிப் பேசுவது என்பதே பலருக்குத் தெரிவதில்லை. அதனால்தான், சண்டைகள், வேறுபாடுகள் ஏன், தற்கொலைகள், கொலைகள், மண முறிவுகள் என எல்லாத் தரப்புப் பிரச்னைகளுக்கும், பேசும்விதமே அடிப்படைக் காரணமாகிறது என்பதே முழுக்க முழுக்க உண்மை.

ஒருவர் பேசும் வார்த்தைகளே அவர் குறித்த பிறரின் மதிப்பீட்டை உருவாக்குகின்றன. வார்த்தைகளில் கவனம் வைத்துப் பேசினால், அவை ஒருவரின் நடத்தையை உருவாக்குகின்றன. அந்த நடத்தையே அவருடைய வாழ்வு ஆகிறது.



'மனதில் உறுதி வேண்டும்' என்று பாடிய பாரதி, 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்கிறான். வாக்கினில் உறுதி வேண்டும் என்று சொல்லவில்லை. 'மனதில் உறுதி... வார்த்தைகளில் இனிமை' இருந்தால், நினைவு நல்லதாகும் நெருங்கிய பொருள் கைப்படும் என்கிறான்!

வள்ளுவர் சொல்கிறார்:

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்!**

ஒரே ஒரு வார்த்தையினால் வாழ்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள். வாழ்வை முடித்துக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். வாழ்வைச் சவாலாக எடுத்துக் கொண்டு வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஒரே ஒரு வார்த்தையினால் உயர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

சிருங்கேரி ஜகத்குரு மஹாஸ்வாமிகள் கூறுவார்கள்: **'தடியை எடுத்தால் மாடு ஓடி மறைகிறது. புல்லைக் காண்பித்தால், அதே மாடு தேடி வருகிறது. மனிதனும் இப்படித்தான்'.**

நல்ல வார்த்தைகளைக் கூறி, பிறரின் மனத்தில் நம்பிக்கையை விதைத்து, நேர்மறை எண்ணங்களை உருவாக்கி, அவர்களைப் பாராட்டினால், அந்த மனிதன் வளர்வான். இதற்கு மாறாக, எப்போதும் எதிர்மறையாகப் பேசுதல், பிறரைக் கேலி செய்தல், குறைகாணுதல், எல்லாருடைய முன்னிலையிலும் மற்றவர்களை அவமானப்படுத்திப் பேசுதல் ஆகியவை கேட்பவரின் நம்பிக்கையைப் பாழாக்கி, அவர்களுடைய சிந்தனையைத் திசை திருப்பி, நல்ல செயல்கள் நடைபெறாமல் தடுப்பதற்குக் காரணமாகிவிடுகின்றன.

அப்படிப் பேசுபவர்கள் அரசியல், குடும்பம் மற்றும் நிறுவனங்களின் தலைவராக இருந்தாலும், அவர்களின் மீதுள்ள மதிப்பும், மரியாதையும் குறையவே செய்கின்றன.

பதவி, அதிகாரம் இந்த இரண்டினால் ஆடும் ஆட்டங்களும், ஆடம்பரங்களும், ஆடும் பம்பரங்கள் போன்றவைதான். சுற்றி முடிந்தபின் கீழே விழுந்தாக வேண்டும்!

நல்ல வார்த்தைகளின் அதிர்வலைகள் எங்கும் பரவும். அரசியல்வாதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஒருவர் சொன்னார்: ஏன் பல அரசியல்வாதிகள், எவ்வளவோ ஊழல்கள் செய்தாலும், தீயவழியில் பயணம் செய்தாலும் வசதியுடன் நன்கு வாழ்கின்றனர் தெரியுமா? அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவரை எப்போதும் 'வாழ்க', 'வாழ்க' என்று வாழ்த்துவதுதான். அந்த வாழ்த்துகளே அரசியல்வாதிகளை வாழ வைக்கின்றன" என்றார். இதில் உண்மை இல்லாமல் இருக்கலாம். அரசியல்வாதிகள் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு வேறு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மிடம் நேர்மறையான கருத்துகளைப் பேசும்போது, நம் மனதில் நேர்மறை எண்ணங்கள் நிரம்பி வழிகின்றன. அது நம் வாழ்க்கையை உயர்வை நோக்கி முன்னேற்றுகிறது. இது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் பொருந்தும்.

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"**

என்பதே உண்மை. ஆனால் அந்த உள்ளத்தை வெளிக்காட்டும் வார்த்தைகள் சரியானதாகவும், பொருத்தமானதாகவும், உரிய காலத்தில், உரியவிதத்தில் வெளிப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

உண்மையைப் பேச வேண்டும். ஆனால் அது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். 'நீ மடத்தில் இருக்கப் பிறக்கவில்லை. இந்த மானுடம் பயனுற, உலகம் செழிக்கப் பிறந்தவன்' என்று கூறி விவேகானந்தரை வாழ்த்தி அனுப்பிய பரமஹம்சரின் வார்த்தைகள்தான் உலகம் முழுக்கத் தெரிந்த விவேகானந்தரை உருவாக்கியது.

இப்படி நேர்மறை வார்த்தைகளும் பாராட்டுகளுமே நம் எல்லாருடைய வாழ்வையும் வளமாக்கி, கனவை நனவாக்கி, மனித வாழ்க்கையை மகிழ்ச்சி நிறைந்ததாக்கும்.

# இந்தவார ராசிபலன் 16.03.2025 - 22.03.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 02
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும். கௌரவப் பட்டங்கள் உங்களை அலங்கரிக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத காரியங்களுக்காக அலைய நேரும். சிலருக்குக் கையிருப்பு குறைந்து பணத்தேவைகள் அதிகரிக்கலாம். இடுக்கண் களைய உதவும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். செய் தொழிலில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார உயர்வில் முன்னேற்றம் ஏற்படும். பூஜை வழிபாடுகள் தடைப்பட்டு வந்த காரியங்கள் அனைத்தும் விரைவாக நடைபெறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கட்டுக்கு அடங்காத செலவுகளால் மன அமைதி குறையும். ஆயினும், புதுப்புது முயற்சிகளால் தனவரவு அதிகரித்து கேளிக்கை ஈடுபாடு, இனிய பயணங்கள் ஆகியவை ஏற்பட்டு சந்தோஷம் தரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சம்பந்தமான நற்செய்திகள் வரும். மக்களிடம் தங்கள் விற்பனைத் திறமைகளைக் காட்டி வியாபாரத்தில் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற இனிய சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். நல்ல வளர்ச்சி ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். எதையும் துணிகரமாக எடுத்து மேற்கொள்ளும் தனித்திறன் உங்களிடம் இருப்பதால் வாழ்க்கையில் உச்சத்துக்குச் செல்வீர்கள். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல ஆன்மிகக் கருத்துக்கள் கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். சுபகாரியச் செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் கெருக்கெடுத்து ஓடும். அதிகாரிகளின் நட்பால்ஆதாயம் பெறுவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நண்பர்களுடன் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி பொங்க பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகை யிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் தாமத மின்றி சாதகமாக நிறைவேறும். தொழிலில் புதிய விரிவாக்கம் சம்பந்த மான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். மகிழ்ச்சியும் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்லதும், கெட்டதும் கலந்த பலன்கள் ஏற்படும் ஆதலால் பக்தி மார்க்க ஈடுபாடு நல்ல பலன் தரும். சாதிக்கத் துடிக்கும் உங்கள் கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட்டையும் பெற்று தரும். உஷ்ணம் காரணமாக உபாதைகள் ஏற்படும். ஆதலால், குளிர்பானங்களை அடிக்கடி எடுத்துக் கொள்வது நல்லது. தந்தைக்கு உங்கள் உதவி தேவைப் படலாம். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்குக ளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அக்கம் பக்கத்தில் தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. மனைவி, குழந்தைகளிடம் மனம் விட்டு சிரித்துப் பேசி மகிழுங்கள்.சிலருக்கு மாற்றத்திற்கான வாய்ப்புகள் வரலாம். கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் இலாபம் பெருகும். பலன் அளிக்கக் கூடிய இனிய பயணங்கள் பலவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங்களைத் தேடிவரும். நெருங்கிய உறவுகளை அனுசரித்து சென் றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அவர்கள் மூலம் பாராட்டவும் படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத் திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.சுபச் செய்திகளால் மனம் மகிழும். தனலாபம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம்?




வீரகத்தி தனபாலசிங்கம்

புலம்பெயர் இலங்கை தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் வாழும் மூத்த பத்திரிகையாளரும் சிறந்த அரசியல் ஆய்வாளர்களில் ஒருவருமான டி.பி.எஸ். ஜெயராஜ் அண்மைக் காலத்தில் எழுதிய கட்டுரைகள் சிலவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு ஒரு நூலாக வெளிவந்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கடந்த வருடம் செப்டெம்பரில் இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அவரது ஆரம்பகால வாழ்க்கை மற்றும் அரசியல் எழுச்சி குறித்து ஆறு கட்டுரைகளையும் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி குறித்து மூன்று கட்டுரைகளையும் ஜெயராஜ் எழுதியிருந்தார். அவற்றின் இந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு 'அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம், இலங்கையின் முதலாவது இடதுசாரி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க' என்று தலைப்பு.

இத்தகையதொரு நூல் வெளிவரப்போகிறது என்று முன்கூட்டியே அறிந்துகொண்ட - ஜெயராஜின் எழுத்துக்களை பற்றி நன்கு தெரிந்த அரசியல் ஆர்வலர்களும் ஊடகவியலாளர்களும் அவர் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் குறித்து மார்க்சியப் பார்வையில் வர்க்க அடிப்படையிலான ஆய்வு ஒன்றைச் செய்து எழுதியி ருக்கிறாரா என்று பதிப்பாளர்களிடம் வினவினார்கள். கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (9-3) மாலை நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்விலும் அந்த கேள்வி எழுந்தது. குறிப்பாக, அங்கு உரையாற்றிய சமூக, அரசியல் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான சுவஸ்திகா அருலிங்கம் அந்த விடயம் குறித்து ஒரு வகையான விமர்சன அடிப்படை யில் கருத்து வெளியிட்டார்.




திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்ததையும் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மகத்தான வெற்றிபெற்று அரசாங் கத்தை அமைத்ததையும் அரசியல் அதிகாரத்தின் ஒரு வர்க்க மாற்றமாக கருதமுடியாது என்று அவர் கூறினார். தன்னை ஒரு இடதுசாரி என்று அடையாளப்படுத்திக் கொண்டு உரையாற்றிய அவர் தேசிய மக்கள் சக்தி அதி காரத்துக்கு வந்திருப்பதை இலங்கையில் முதலாளி வர்க்கத்தை தோற்கடித்து தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியதாக வியாக்கியானம் செய்தலா காது என்று கூறிவைக்கவே விரும்பினார் என்று தெரிகிறது. நூலின் தலைப்பே இந்த குழப்ப நிலைக்கு காரணமாகும்.

'அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம்' என்ற தலைப்புடன் நூல் வெளிவருவிருக்கிறது என்று ஜெயராஜூக்கு அறிவிக்கப்பட்டபோது அவர் தான் அவ்வாறு எந்தவிதமான வர்க்கக் கண்ணோட்டத்தில் திசாநாயக்கவினதும் தேசிய மக்கள் சக்தியினதும் எழுச்சியை பார்க்கவில்லை என்றும் அத்தகைய தலைப்பு தன்னை ஒரு அசௌகரியத்துக்கு உள்ளாக்கிவிடக்கூடும் என்றும் கூறினார். ஜெயராஜை பொறுத்தவரை 'அநுர குமார திசாநாயக்கவின் வாழ்வும் அரசியல் எழுச்சியும்' என்பதே நூலுக்கு பொருத்தமான தலைப்பு.

'அநுர குமார திசாநாயக்க இலங்கை வானில் ஒரு இடதுசாரி நட்சத்திரம்' என்ற தலைப்பிலான முதலாவது கட்டுரையில் ஜெயராஜ் ஜனாதிபதியின் எழுச்சி பற்றிய தனது பார்வையை பின்வருமாறு முன்வைக்கிறார்,

'அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற நாளில் இருந்து சர்வதேச ஊடகங்கள் (மேற்கத்தைய மற்றும் இந்திய ஊடகங்கள்) அவரை மார்க்சிஸ்ட், லெனினிஸ்ட், நவ மார்க்சிஸ்ட், இடதுசாரி, மத்திய இடது அரசியல்வாதி என்று பலவாறாக வர்ணித்து வருகின்றன. சில இந்திய விமர்சகர்கள் அவருக்கு 'இந்திய விரோதி' என்றும் 'தமிழர் விரோதி' என்றும் நேர்மையற்ற முறையில் நாமகரணம் சூட்டுகின்றனர். எனது நோக்கில் திசாநாயக்க நிச்சயமாக இடதுசாரிக் கோட்பாடுகளுக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு இடதுசாரி. ஆனால், பாரம்பரிய அர்த்தத்தில் அவரை ஒரு மார்க்சிஸ்ட் என்று அழைக்கமுடியுமா என்பது சந்தேகமே.

'டொனால்ட் ட்ரம்ப் என்ற பேர்வழி வெள்ளை மாளிகையை அசிங்கப்படுத்துவதற்கு முன்னதாக அந்தக் காலத்தில் அமெரிக்க ஜனாதிபதிகள் பரவலாக பெருமளவுக்கு மதிக்கப்பட்டனர். பல அமெரிக்க ஜனாதிபதிகளின் வாழ்க்கைச் சரிதைகள் வாசித்துச் சுவைக்கப்பட்டன. பலர் ஆபிரகாம் லிங்கனையே சிறந்த அமெரிக்க ஜனாதிபதியாக நோக்குவர். அடிமை முறையை ஒழிப்பதற்கும் அடிமைகளின் தளைகளை அறுத்து அவர்களை விடுவிப்பதற்கும் உள்நாட்டுப்போர் ஒன்றையே நடத்துமளவுக்கு அவர் சென்றார்.

'லிங்கன் மிகவும் எளிமையான பின்புலத்தைக் கொண்ட ஒரு மனிதர். அமெரிக்காவின் அதியுயர்ந்த பதவிக்கு அவரின் உயர்வு' மரக்கொட்டகையில் இருந்து வெள்ளை மாளிகைக்கான ஒரு கதை"என்று அழைக்கப்படும். அதே போன்றே திசாநாயக்கவும் கூட இலங்கையின் முதல் குடிமகனாக வந்திருக்கும் ஒரு சாதாரண மனிதரே. அவரின் உயர்வையும் கூட 'மண் வீட்டில் இருந்து ஜனாதிபதி மாளிகைக்கு வந்த காவியம்' என்று வர்ணிக்க முடியும்.

இலங்கையில் இதுகாலவரையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களில் ரணசிங்க பிரேமதாசவையும் மைத்திரிபால சிறிசேனவையும் தவிர, மற்றையவர்கள் சகலரும் பாரம்பரியமான அரசியல் அதிகார உயர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். பிரேமதாசவும் சிறிசேனவும் கூட அந்த உயர்வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வந்திருக்கும ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் மூலமாகவே ஜனாதிபதியாக வந்தனர்.

அதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அந்த அதிகார வர்க்கத்தையும் அதைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளையும் சாராத ஒருவரான, அதுவும் ஒரு காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆயுதக்கிளர்ச்சிகளை நடத்திய இடதுசாரி கட்சியொன்றின் இன் றைய தலைவரான திசாநாயக்க ஜனாதிபதியாக வந்த தில் ஒரு தரம்சார்ந்த மாற்றம் இருக்கிறது. அதை விளங் கிக்கொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்க முடியாது. தன்னை ஒரு மார்க்சிய -- லெனினியவாதி என்று திசா நாயக்க தற்போது வெளிப்படையாக அடையாளப்ப டுத்திக் கொள்கிறாரோ இல்லையோ அது வேறு விடயம்.

ஆனால், இடதுசாரி இயக்கம் ஒன்றைச் சேர்ந்த - ஒரு காலத்தில் ஆட்சியதிகாரத் துக்கு மாத்திரமல்ல, அரசியலிலும் கூட மிகவும் உயர்ந்த இடத்துக்கு வரு வது குறித்து நினைத்துப் பார்த்திருக்க முடியாத ஒரு எளிமையான குடும்பப் பின்புலத்தைக் கொண்ட அவர் நாட்டின் அதியுயர்ந்த பதவிக்கு மக்களால் தெரிவாகக் கூடியதாக இருந்ததை ஒரு வித்தியாசமான கோணத்தில் பார்த்தே ஜெயராஜின் நூலுக்கு அந்த தலைப்பை வெளியீட்டாளர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

திசாநாயக்க ஒரு இடதுசாரிக் கிளர்ச்சி மூலமாக ஆட்சிக்கு வரவில்லை. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட படுமோசமான பொருளாதார நெருக்கடியை அடுத்து அன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக இலங்கை வரலாறு முன்னென்றும் கண்டிராத வகையில் மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தார்கள். ஆரம்பக்கட்டங்களில் அந்த கிளர்ச்சியில் ஒரு அமைதி வழியிலான அரசியல் புரட்சியின் பரிமாணங்கள் தென்பட்டன. தெற்காசிய பிராந்தியத்தில் முதன் முதலாக மக்கள் கிளர்ச்சி ஒரு அரசாங்கத்தை தூக்கியெறிந்த முதல் சந்தர்ப்பமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் வீழ்ச்சி அமைந்தது.

கடந்த வருடம் ஆகஸ்டில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாட்டை விட்டு விரட்டிய கிளர்ச்சிக் காரர்களுக்கு இலங்கையின் கிளர்ச்சி நிச்சயமாக ஒரு முன்னுதாரணமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பங்களாதேஷில் கிளர்ச்சிக்காரர்களின் பக்கம் நின்ற அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின் தலைவரான முஹமட் யூனுஸ் இடைக்கால தலைவராக வந்ததைப் போன்று, கோட்டாபய நாட்டை விட்டு தப்பியோடிய பிறகு கிளர்ச்சிக்காரர்கள் ஆட்சிக்கு வரவில்லை. அறகலய கிளர்ச்சியின் முன்னரங்கத்தில் நின்ற செயற்பாட்டாளர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டபோது மக்கள் அவர்களை கருத்தில் எடுக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அறகலய கிளர்ச்சியின் விளைவாக நாட்டு மக்கள் மத்தியில் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்துக்கும் அதை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளுக்கும் எதிராக மக்கள் மத்தியில் வளர்ந்த உணர்வுகளை மிகவும் விவேகமான முறையில் பயன்படுத்தி திசாநாயக்கவினால் ஜனாதிபதியாகவும் தேசிய மக்கள் சக்தியினால் ஆளும் கட்சியாகவும் வரமுடிந்தது. இதை தொழிலாளர் வர்க்கம் இடதுசாரி இயக்கம் ஒன்றின் தலைமையில் அதிகாரத்துக்கு வந்திருப்பதாக எவரும் கூறவில்லை. ஜனாதிபதியோ அல்லது தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களில் எவருமோ கூட அவ்வாறு கூறவில்லை.

இடதுசாரிகளினால் இலங்கையில் ஒருபோதும் அதிகாரத்துக்கு வரமுடியவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த இடதுசாரி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களில் ஒரு பிரிவினர் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்ததை அடுத்து தங்களுக்குள் திருப்திப் பட்டுக்கொண்டார்கள்.

ஆனால், முன்னர் ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்களை விடவும் வேறுபட்ட சமூகப் பின்னணியுடனான அதிகப் பெரும்பான்மையானவர்களைக் கொண்டதாக இன்றைய அரசாங்கம் இருக்கிறது. இதை கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு எழுதிய கட்டுரை ஒன்றில் இலங்கையின் முக்கியமான அரசியல் நிபுணரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட மிகவும் தெளிவான முறையில் விளக்கியிருந்தார்.

'இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க பதவியேற்ற நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புதிய தொடக்கம் ஒன்றை குறித்து நிற்கிறது. அரசியல் அதிகாரத்தின் வர்க்கத் தளங்களில் ஒரு திடீர் நகர்வை அடையாளப்படுத்துவதாக அந்த தொடக்கம் அமைகிறது. அதாவது கொழும்பை மையமாகக் கொண்ட - மேற்கத்தைய பாணி வாழ்க்கை முறையைப் பின்பற்றும் வசதிபடைத்த ஒரு சிறிய எண்ணிக்கையான பிரிவினரிடம் இருந்து அதிகாரத் தளங்கள் உயர் வர்க்கத்தைச் சாராத சமூக சக்திகளின் கூட்டணி ஒன்றுக்கு நகர்ந்திருக்கிறது.

> **சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் ஏற்றுக்கொள்கின்ற மனநிலை தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துக்கு ஏற்படாத பட்சத்தில் புதிய கலாசாரம் என்பதில் எந்தவிதமான அர்த்தமும் இருக்கப்போவதில்லை.**

'காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரமடைந்த நாளில் இருந்து இலங்கையின் ஜனநாயகம் அரசியல் அதிகாரத்தில் உயர் வர்க்கத்தவர்களின் இடையறாத தொடர்ச்சியை உத்தரவாதம் செய்திருந்தது என்றால், இப்போது அது கடந்த காலத்தில் இருந்து ஒரு விலகலை ஏற்படுத்தியிருக்கிறது. அது ஜனநாயகத்தினாலும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களினாலும் அவ்வப்போது தோற்றுவிக்கப்படக் கூடிய ஒரு வியத்தகு தருணமாகும்.

'குறிப்பாக, தேர்தல் முடிவுகள் அமைதியான - இரத்தம் சிந்தாத அதிகார மாற்றத்தைக் குறித்து நிற்கிறது. சுமார் ஏழு தசாப்தங்களாக வசதிபடைத்த சமூக வர்க்கங்களின் பிறப்புரிமை போன்று நிலைத்திருந்த ஊழல்தனமானதும் நாட்பட்டுப் போனதுமான அரசாங்க முறைமை ஒன்றை முழுவதுமாக மாற்றியமைப்பதற்கான வாக்குறுதியுடன் புதிய ஜனாதிபதி தனது மக்கள் ஆணையைப் பெற்றிருக்கிறார். நிறுவனமயப்படுத்தப்பட்டிருந்த அரசியல் அதிகாரத்தின் மீதான வர்க்க ஏகபோகம் ஜனநாயகத்தின் ஊடாக பொதுமக்களினாலேயே இப்போது தகர்க்கப்பட்டிருக்கிறது" என்று பேராசிரியர் உயன்கொட எழுதினார்.

'அறகலய' மக்கள் கிளர்ச்சி 'முறைமை மாற்றத்தையும்' புதிய அரசியல் கலாசாரத்தையும் வேண்டி நின்றது. அந்த சுலோகங்களை தனது கையில் எடுத்துக் கொண்டு தேர்தல்களைச் சந்தித்த ஜனாதிபதி திசாநாயக்கவிடம் 'மெய்யான மாற்றம்' ஒன்றுக்கு வழிவகுக்கக்கூடிய 'புதிய தொடக்கம்' ஒன்றையே மக்கள் எதிர்பார்த்தார்கள். நாட்டை ஆட்சிசெய்ய வேண்டியவர்கள் யார் என்பதை தீர்மானிப்பதில் வழமைக்கு மாறான தீவிர மாற்றத்தைச் செய்ததன் மூலமாக அந்த புதிய தொடக்கத்தை நோக்கிய திசையில் முதலாவது அடியை இலங்கை மக்கள் எடுத்துக் கொடுத்தார்கள்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் அதன் மந்தவேகத்துக்கு விளக்கம் தரவேண்டியது அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் அறகலய மக்கள் இயக்கம் சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்தது. அரசாங்க மாற்றம் ஒன்றைக் கோரி சகல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் வயது வேறுபாடின்றி ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு கிளர்ச்சியில் இறங்கிய நிலையில், கொழும்பு வீதிகளில் ஜனநாயகம் கொண்டாடப்பட்டதை உலகம் பார்த்தது.

தேர்தல்களின்போது அரசாங்கங்களை அமைக்கவும் வீதிகளில் இறங்கி அமைதிவழியிலான போராட்டத்தின் மூலமாக அரசாங்கத்தை விரட்டியடிக்கவும் மக்களிடம் வல்லமையும் செயலாண்மையும் இருக்கிறது என்பதை அறகலய வெளிக்காட்டியது. இதுவே இலங்கையின் அறகலய உதாரணத்தில் இருந்து ஏனைய பிராந்தியங்களின் நாடுகள் குறிப்பாக, தெற்காசியப் பிராந்தியத்தில் பங்களாதேஸும் பாகிஸ்தானும் மனதிற்கு எடுத்துக் கொண்ட மிகவும் வலிமை வாய்ந்த ஒரு செய்தியாகும். அந்த செய்தி சிக்கலான பிரச்னைகளுக்கு இடையிலான பிணைப்பு பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டதும் பிரச்சினைகளின் அடையாளங்களை விடுத்து மூலக் காரணிகளை கையாள்வதற்கு பல்வேறு துறைகளையும் மட்டங்களையும் கடந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு வழிவகுக்கக்கூடியதுமான 'அமைப்பியல் சிந்தனை" கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கோருகிறது.

மக்களிடமே அதிகாரம் இருக்கிறது என்பதும் அரசாங்கம் செயலாற்றல் அற்றதாக மாறுவதற்கும் தேசிய நலன்களுக்கு குந்தகமாக நடந்து கொள்வதற்கும் அனுமதிக்கக்கூடியதாக மக்கள் அந்த அதிகாரத்தை விட்டுக் கொடுத்துவிடுவதில்லை என்பதுமே ஜனநாயகத்தின் அர்த்தமாகும். அறகலய காலத்தில் செய்ததைப் போன்று மாற்றத்தை நோக்கி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசியல் கட்சிகள், வர்த்தக சமூகம், அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சமூகக்குழுக்கள் உட்பட பல்வேறு துறைகள் மத்தியிலும் ஒத்துழைப்பையும் ஜனநாயகம் வேண்டி நிற்கிறது.

அறகலய இயக்கம் வீதிப்போராட்டங்கள் மூலமாக தூக்கியெறிந்த அரசாங்கம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் நாட்டில் முன்னென்றும் இல்லாத வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்டதாகும். அதன் பதவிக்காலத்தில் மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலம் எஞ்சியிருந்தது. ஆனால், அந்த அரசாங்கம் தேசிய நலன்களை மேம்படுத்துவதற்கு பதிலாக அவற்றை ஆபத்துக்கு உள்ளாக்குகிறது என்பதும் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கிறது என்பதும் வெளிவாக தெரிய வந்தபோது மக்கள் சக்தி தடுத்து நிறுத்தப்பட முடியாதததாக மாறியது.


இதேபோன்ற நிலைவரம் பங்களாதேஷிலும் ஒரு வருடத்துக்கு முன்னர் தோன்றியது. அரிதாக இருக்கும் அரசாங்க தொழில் வாய்ப்புகளை வழங்குவதில் ஆளும் கட்சியின் ஆதரவாளர்களுக்கு சலுகை வழங்கும் கோட்டா முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் தீர்மானித்தபோது அந்த நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஏற்கெனவே பொருளாதார இடர்பாடுகளினாலும் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இலங்கை மக்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் தங்கள் சொந்த நாட்டில் கண்டதைப் போன்று பங்களாதேஷ் மக்களும் தங்களது நாட்டை ஆட்சிசெய்தவர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதையும் அதிகாரத்தில் இருப்பது தங்களது உரித்து என்ற மனோபாவத்துடன் நடந்துகொண்டதையும் கண்டார்கள்.

இதையடுத்து மாணவர்கள் தலைமையில் போராட்டங்கள் மூண்டன. சமூகத்தின் சகல பிரிவினருக்கும் ஒப்புரவான முறையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தவர்கள் ஆட்சியதிகாரத்தில் இருப்பதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து இளைஞர்கள் வீதிகளில் இறங்கினார்கள். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஒரு அரசாங்கம் தூக்கியெறியப்பட்டதை தொலைக்காட்சியிலும் சமூக ஊடகங்களிலும் பார்த்த பங்களாதேஷ் மக்கள் இலங்கை உதாரணத்தைப் பின்பற்றினார்கள்.

பங்களாதேஷ் கிளர்ச்சிக்கும் இலங்கை கிளர்ச்சிக்கும் இடையில் ஒற்றுமைகளுக்கு மத்தியிலும், முக்கியமான வேறுபாடுகளும் இருக்கின்றன. இலங்கையில் போராட்ட இயக்கம் மிகவும் குறைந்தளவு உயிரிழப்புகளுடன் மாத்திரம் அதன் இலக்கைச் சாதித்தது. பங்களாதேஷில் ஒரு சர்வாதிகாரமாக மாறிவிட்ட அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அணிதிரண்டார்கள். அந்த அரசாங்கம் போராட்டங்களை அடக்கியொடுக்கும் முயற்சியாக மோசமான வன்முறையை பயன்படுத்தியது. ஆனால், இலங்கையில் ஆட்சிமாற்றச் செயன்முறை அரசியலமைப்பின் பிரகாரம் அமைதிவழியில் இடம்பெற்றது.



> **இனப்பிரச்சினையையும் பௌத்த சமூகத்தவர்கள் வாழாத பகுதிகளில் பௌத்தமத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதன் விளைவாக தோன்றிய பிரச்னைகள் போன்ற மதரீதியான மனக்குறைகளையும் அரசாங்கம் கையாள வேண்டியதும் அவசியமாக இருக்கிறது.**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியை துறந்த போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார். பிறகு பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் வெற்றிபெற்று அவர் ஜனாதிபதியானார். விக்கிரமசிங்க தனது அமைச்சர்களை நியமித்து பதவிக்காலம் முடியும் வரை ஆட்சிசெய்தார். இலங்கையின் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் என்று வர்ணிக்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க புதிய ஜனாதிபதியாக தெரிவானார்.

பங்களாதேஷில் பிரதமர் வெளிநாட்டுக்கு தப்பியோடிய பிறகு புதிய பிரதமரை பாராளுமன்றம் தெரிவு செய்யவில்லை. பதிலாக, ஜனாதிபதி முஹமட் சஹாபுதீன் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனத்தின் தலைவர் முஹமட் யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை நியமித்தார். இந்த இடைக்கால அரசாங்கம் தேர்தல்கள் இல்லாமல் எவ்வளவு காலத்துக்கு தொடர்ந்து ஆட்சி செய்யும் என்பது பங்களாதேஷில் ஒரு கேள்வியாக இருக்கிறது. பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமரின் கட்சி உட்பட பிரதான அரசியல் கட்சிகள் விரைவாக தேர்தல்களை நடத்துமாறு கோருகின்றன.

ஆனால், படுமோசமான வன்முறைகளை அனுபவித்து வீதிப் மோராட்டங்கள் மூலமாக அரசாங்கத்தை தூக்கியெறிந்த போராட்ட இயக்கத்தின் தலைவர்கள் இந்த நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவதை விருப்பவில்லை. நடந்தது என்ன என்பது பற்றிய உண்மையை கண்டறிவதற்கும் மக்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்தியவர்களை பொறுப்புக்கூற வைக்கவும் நிலைமாறுகால நீதிச் செயன்முறை ஒன்று தேவை என்று அவர்கள் கோருகிறார்கள்.

ஆனால், இதற்கு முரணாக இலங்கையில் அரசாங்க மாற்றம் சட்டரீதியாக அரசியலமைப்புச் செயன்முறையின் மூலமாக இடம்பெற்றதுடன் அறகலய போராட்டங்கள் இடம்பெற்ற நேரத்தில் பதவியில் இருந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிலைமாறுகால நீதிச் செயன்முறை ஒன்றுக்கு கோரிக்கை விடுக்கப்படவில்லை. மனித உரிமை மீறல்களிலும் ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கூட சுதந்திரமாக தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் படுமோசமான முறையில் தோற்கடிக்கப்பட்டார்கள். புதிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தெரிவு செய்தார்கள். கடந்த காலத்தில் நாட்டை ஆட்சி செய்தவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிராத புதியவர்கள் மக்கள் அதிகாரத்துக்கு கொண்டுவந்தார்கள்.

இது ஒரு வகையில் பலமும் பலவீனமுமாகும். புதிய அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இலட்சியவாதிகளாகவும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் மானசீகமான அக்கறை கொண்டவர்களாகவும் இருப்பது பலம். ஆனால், தங்களில் மாத்திரமே தங்கியிருந்து பரந்தளவிலான கலந்தாலோசனை இன்றி அவர்கள் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள் தவறான தீர்மானங்களுக்கு வழிவகுக்கக்கூடியதாக இருப்பது பலவீனமாகும். பெரும்பான்மையாக தமிழ்ப் பீடங்களையும் தமிழ் மாணவர்களையும் கொண்டதாக விளங்கும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேரவையின் உறுப்பினர்களாக சிங்களவர்கள் நியமிக்கப்பட்டதை இதற்கு ஒரு உதாரணமாகக் கூறலாம்.

இனநெருக்கடி உட்பட தீர்த்துவைக்கப்படாத பெருவாரியான பிரச்சினைகளுடனான ஒரு நாட்டை பொறுப்பேற்றதே புதிய அரசாங்கத்தின் பிரச்சினையாகும். எந்த வகையில் பார்த்தாலும், மக்களை மிகவும் மோசமாக வதைக்கின்ற பிரச்சினை பொருளாதாரப் பிரச்னையேயாகும். சனத்தொகையில் 25 சதவீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வீழ்ந்துவிட்டார்கள். மூன்று வருடகளுக்கு முன்னர் இருந்த வீதத்தை விடவும் இது இரண்டு மடங்காகும். வசதி படைத்த பாவனையாளர்கள் பெருமளவில் செலவு செய்கிறார்கள் என்று ஒரு தோற்றப்பாட்டுக்கு மத்தியிலும் வறியவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி கணிசமானளவுக்கு அதிகரித்திருக்கிறது. பொருளாதார ரீதியில் எவ்வாறு தப்பிப் பிழைத்துக்கொள்வது என்பதே பெரும்பாலான மக்களின் அன்றாட போராட்டமாக இருக்கிறது.

முன்னைய அரசாங்கம் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் சுமையையும் பட்ஜெட்டைச் சமநிலைப்படுத்தும் பொறுப்பையும் சனத்தொகையின் வறிய பிரிவுகள் மீது சுமத்திய அதேவேளை பொருளாதாரத்தின் இயந்திரங்களாக செயற்படவேண்டியவர்கள் என்று எதிர்பார்க்கப்படும் உயர் வர்க்கத்தவர்களை அந்த சுமைகளில் இருந்து தவிர்த்திருந்தது. இந்த ஒப்புரவின்மையை புதிய அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அவ்வாறு செய்வதற்கு வாய்ப்புக்கள் பெரிதாக இல்லை. கடந்தகால தவறான நடவடிக்கைகளின் விளைவாக அரசாங்க திறைசேரி காலியானதே அதற்கு காரணமாகும்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறு தேங்காய்க் களத்தில் தடுமாறும் தமிழ்க் கட்சிகள்!

பனங்காட்டான்



> தெற்கில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வெற்றி பெறுவது என்ற எண்ணவோட்டத்தில் அரசியல்களம் அமைந்துள்ளது. ஆனால், அடுத்த மாத உள்ளூராட்சித் தேர்தலில் எந்தக் கட்சியில் எவர் போட்டியிடுவது, எந்தக் கட்சிக்கு கதிரைப் பாய்ச்சல் நடத்துவது என்ற போட்டி தமிழர் பிரதேசத்தில். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் என்றுமே இணைய முடியாது போலும்.

நீங்கள் வேறு நாடையா, நாங்கள் வேறு நாடையா என்று தாயக தேசிய கவிஞர் புதுவை இரத்தினதுரை பாடிய பாடல் மிகவும் பிரபல்யமானது. ஆயுதப்போர் உக்கிரமாக இருந்த காலத்தில் தமிழர் தேசத்தில் பட்டிதொட்டி எங்கும் பரவலாக இது ஒலிபரப்பானது.

இதனை இப்போது கூறுவதற்கு சில காரணங்கள் உண்டு. இதில் முக்கியமானது, அடுத்த மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு தமிழர் தேசக் கட்சிகள் வேட்பாளர்களைத் தேடுவதிலும், யாருடைய கழுத்தை யார் அறுப்பது என்பதிலும் தீவிரமாகிக் கொண்டிருக்க, சிங்கள தேசம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எந்தக் கட்சி எவ்வாறு வெற்றி பெறுவது என்பது பற்றி ஆய்வு நடத்திக் கொண்டிருக்கின்றது.

2029ல் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் கட்சியே மீண்டும் ஆட்சி அமைக்குமென அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி பகிரங்கமாக அறிவித்து வருகிறது. இதற்கு மறுத்தான் கொடுப்பதுபோல மகிந்தவின் பொது ஜன பெரமுன தாங்களே வெற்றி பெறப் போவது என்று மட்டும் சொல்லாது, அடுத்த ஜனாதிபதி தங்களின் நாமல் ராஜபக்ச என்றும் அதற்கான வியூகம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்க ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி தாங்கள் தனித்தே அடுத்த தேர்தலைச் சந்திப்போம் என்று கூறிக்கொண்டிருந்தாலும், சஜித் பிரேமதாசவை ஒருவாறு அப்புறப்படுத்திவிட்டு அவரது கட்சியை முழுமையாக தங்களுடன் இணைப்பதற்கான உத்திகளை தேடிக்கொண்டிருக்கிறது.

மேற்சொன்ன மூன்று தரப்பும் அடுத்த மாத உள்ளூராட்சித் தேர்தலை பெரிதாகக் காட்டிக்கொள்ளவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் கையகப்படுத்திய அநுர குமார தரப்பு இந்தத் தேர்தலையும் வெற்றி கொள்ளுமென்ற எதிர்பார்ப்பில், ஆர்ப்பாட்டமில்லாது இயலுமானவரை பெறக்கூடிய ஆசனங்களைப் பெற்றால் போதுமென்ற போக்கில் தேர்தலைச் சந்திக்கின்றன.

புதுவையின் பாடலுக்கு இணையான சொற்கோவையை வீசி விட்டால் தமிழரசுக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில் அதன் பதில் செயலாளர் சுமந்திரன் நான்கு வார்த்தைகளை விளாசியுள்ளார். 'நாடு அநுராவோடு, வீடு எங்களோடு" என்ற நம்பிக்கையை இவரது சுலோகம் தெரிவித்து நிற்கிறது. ஆனால், களநிலைவரம் அவ்வாறில்லை. அநுராவின் அலை மற்றவர்கள் சொல்வதுபோல இன்னும் ஓயவில்லை என்னும் சுமந்திரனின் கூற்று தமிழர் தாயகத்துக்கும் பொருந்தக்கூடியவாறே நிலைமை காணப்படுகிறது.

தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொண்டதால்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கில் படுதோல்வியைக் கண்டது என்கின்ற அபிப்பிராயம் பலரிடம் உண்டு. ஆனால், அநுர தரப்பு தகுதியான வேட்பாளர்களைக் கண்டெடுத்து, வாக்காளப் பெருமக்களை நாடி பிடித்துப் பார்த்து தேர்தலைச் சந்தித்த முறை அவர்களுக்கு எதிர்பாராத வெற்றியை பெற்றுக்கொடுத்தது என்பதை ஏனோ இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தமிழ்க் கட்சிகளுக்குள் ஏற்பட்ட பிளவும் பிரிவும் இவர்களின் தோல்விக்கான அடிப்படைக் காரணம். இதனை நிவர்த்தி செய்வதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. தமிழரசுக் கட்சியின் இயங்குதளத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் போதிய அபேட்சகர்களைப் பெறமுடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளது. அடுத்த பொதுத்தேர்தலில் முயற்சிப்போம் என்றவாறு மெதுவாக நழுவ வேண்டி வந்துவிட்டது.

இவைகள் ஒருபுறம் ஓடிக்கொண்டிருக்க தமிழர் தரப்பு இப்போது எங்கு நிற்கிறது என்பதை பார்ப்பது அவசியமாகிறது. உள்ளூராட்சித் தேர்தல் வரப்போகிறது என்ற தகவல் வந்தபோதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என அழைக்கப்படும் தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒற்றுமை முயற்சி ஒன்றை ஆரம்பித்தார். இதன் ஒரு கட்டமாக தமிழரசுக் கட்சி எம்.பி. சிறீதரனோடு, அவர் தமிழரசின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் என்ற அடிப்படையில் நேரடிப் பேச்சை நடத்தினார்.

ஆனால், கட்சியின் தலைமைப்பீடம் அங்கிருக்கும் ஒருவரின் முடிவுக்கிணங்க இந்த முயற்சியை எதிர்த்தது. இதனால் உத்தியோகபூர்வமாக தமிழரசுக் கட்சியோடு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் நோக்கில், கட்சியின் பதில் தலைவர் திரு. சீ.வி.கே.சிவஞானத்தின் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட ஆவணத்தை அவரிடம் கஜேந்திரகுமார் கையளித்தார். சுமந்திரனின் ஆலோசனையின் பேரில் கஜேந்திரகுமாரின் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கவில்லை. புதிய அரசியலமைப்பு வரும்போது நிலைமையைக் கவனிப்போம் என்று சீ.வி.கே. அவர்கள் பதிலளித்து விடயத்தை மூடிவிட்டார்.

இதனை எழுதும்போது 1976ம் ஆண்டு வரலாற்று நிகழ்வொன்று ஞாபகத்துக்கு வருகிறது. இலங்கையின் அரசியல் சட்டத்தை மீறி தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டார்கள் என்று காரணம் கூறி அவர்கள் மீது இலங்கை அரசாங்கம் ட்ரயல் அற் பார் வழக்கினைத் தாக்கல் செய்தது. இவ்வழக்கில் அரசியலுக்கு அப்பால் தமிழின ஒற்றுமையைக் காட்டும் வகையில் அனைத்துத் தமிழ் சட்டவாளர்களும் ஆஜராவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழரசுத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தை நாடிச் சென்று அழைப்பு விடுத்தபோது அவர் அதனை ஏற்று வழக்கில் ஆஜரானார். அரசியலில் பரம எதிரியாகவிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அழைத்தபோது ஜி.ஜி.பொன்னம்பலம் மறுக்காது வழக்கில் பங்குபற்றியது தமிழர் அரசியலில் முக்கியமான ஒன்று. மொத்தம் 67 தமிழ் வழக்கறிஞர்கள் இதில் ஆஜராகியிருந்தனர்.

இது நடைபெற்று ஐம்பதாண்டுகளாகும் நிலையில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் தமிழரசுத் தலைவரின் இல்லம் தேடி இன நன்மைக்காக ஒன்றுபடும் அழைப்பை விடுத்தபோது அது நிராகரிக்கப்பட்டது ஏற்புடையதல்ல என்பது பலருடைய கருத்து. இன்று மிக முக்கியமான ஒரு காலத்தில் இரண்டு பிரதான கட்சிகளினதும் இணைப்பு அவசியமானதென்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால் ஏனோ அது நிராகரிக்கப்பட்டு விட்டது.

இதன் தொடர்ச்சியாக பல்வேறு இணைப்பு, துண்டிப்பு, மறுப்பு போன்ற நிகழ்ச்சிகள் தமிழ் கட்சிகளிடையே இடம்பெறுகிறது. இது எதுவுமே கனியாகும் சாத்தியம் காணப்படவில்லை. அன்றைய தமிழ்த் தலைவர்களிடமிருந்த விட்டுக்கொடுப்பும் இணங்கிப் போகும் தன்மையும் இப்போது அறவே இல்லாமலாகி விட்டது. இதற்கு முக்கிய காரணம், தமிழரசுக் கட்சிக்கு நிரந்தரமான தலைவரோ, செயலாளரோ இல்லாதிருப்பதே. எல்லாப் பதவிகளுமே பதில் பதவிகளாக இருப்பதால் அவரவர் முடிவு கட்சியின் முடிவாகிப் போகிறது.

முன்னாள் தலைவர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்களை தங்கள் விருப்புக்கு ஏற்ப வளைத்தெடுத்தவர்கள் இப்போது அதே பாதையில் பயணிப்பதே தமிழரசுக் கட்சியின் இன்றைய இறங்குநிலைக்கு முக்கிய காரணம். இதன் ஒரு பக்கமாக, ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்லத் தள்ளப்பட்டு வெளியே போனவர்களை மீள இணைப்பதற்கு தமிழரசுக் கட்சி எடுத்த முடிவும் பிசுபிசுத்துப் போயுள்ளது.

பார்க்கப் போனால் தமிழ்த் தேசியம் என்று தங்களை அடையாளப்படுத்தும் அனைத்து தமிழ்த் தேசிய அமைப்புகளும் நவக்கிரகங்கள் போல் ஒன்றையொன்று பார்க்க விரும்பாது தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருக்கின்றன. உதாரணத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் பதினேழு உள்ளூராட்சிச் சபைகளுக்கும் இடம்பெறப்போகும் போட்டியை கூறலாம்.

தமிழரசுக் கட்சி அனைத்துச் சபைகளிலும் தனித்தே போட்டி என்று அறிவித்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று போட்டியிட்ட சட்டவாளர் கே.வி.தவராஜா தலைமையிலான அணி ஜனநாயக தமிழரசுக் கட்சி என்ற பெயரில் ஐந்து கட்சிக் கூட்டணியான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சேர்ந்து போட்டியிட முன்வந்துள்ளது.

கஜேந்திரகுமார் கட்சியில் முன்னர் அங்கம் வகித்த மணிவண்ணன் தலைமையிலான குழு இப்போது சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியுடன் இணைந்துள்ளது. இவர்கள் யாழ்ப்பாணத்தின் பதினாறு சபைகளுக்குப் போட்டியிடுகின்றனர் வடமராட்சியில் ஒரு சபைக்குப் போட்டியிடும் சுயேட்சைக் குழுவோடு இணைந்து போட்டியிடுகின்றனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி மேலும் இரண்டு கட்சிகளுடன் யாழ் தேர்தல் மாவட்டத்திலும் ஏனைய இடங்களில் கூட்டணியாக தனித்தும் போட்டியிடப்போவதாக ரெலோ தலைவர் அறிவித்திருக்கிறார். அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தின் பதினேழு சபைகளிலும் போட்டியிடுகின்றன. இவை அனைத்திலும் தாங்களே வெற்றி பெறுவோமென தேசிய மக்கள் சக்தியின் வடபகுதி அமைப்பாளரான அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் அநுர குமார அணி மூன்று ஆசனங்களை எவ்வாறு இலகுவாக வென்றது என்பதை தமிழர் தரப்பு கட்சிகள் சுயமாக பரிசீலனை செய்து பார்ப்பார்களாயின், உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையுமென்பதை இலகுவாகக் கிரகிக்க முடியும். இனத்தின் நன்மை கருதியாவது இவர்கள் தேவைப்படும்பொழுது விட்டுக்கொடுத்தும் தேவையான இடங்களில் இணைந்தும் போட்டியிட்டு பதினேழு சபைகளையும் கைப்பற்ற முடியும். ஆனால், இனம், கட்சி, மக்கள், எதிர்காலம் என்பவைகளைத் தவிர்த்து, பதவிச்சுகம் மட்டுமே தேவை என்று கருதுவதால் இணைந்து செல்வதில் இவர்களுக்கு நாட்டம் வரவில்லை.

ஏற்கனவே உள்ள பிளவுகள் போதாதென்று இப்போது தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்து இன்னொரு புதிய தமிழரசுக் கட்சி குட்டி போடப்போவதாகவும் ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படி எதுவுமில்லை, கட்சியை பிளப்பதற்கான ஒரு சதி என்று தமிழரசின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். அரசியலில் சதி என்பது தவிர்க்க முடியாத ஓரங்கம். சதிகளால்தான் ஒவ்வொரு கட்சிகளிலிருந்தும் இன்னொரு கட்சிகள் உருவாகின என்பது வரலாறு.

தற்போதுள்ள மகிந்தவின் பொதுஜன பெரமுன, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி என்பவை அவர்களின் முன்னைய கட்சிகளில் இடம்பெற்ற சதி முயற்சிகளால் உருவாகி சிங்கள தேசத்தில் முன்னணியில் நிற்பதை நினைவிற் கொண்டால், புதிய தமிழரசுக் கட்சி என்பதும் அதுபோன்ற ஒரு சதியால் உருவாகக்கூடும். அவ்வாறு உருவாகுமானால் அதற்கான முழுப்பொறுப்பையும் இப்போதுள்ள கட்சியின் நிர்வாகிகளே சுமக்க நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிச்சலூட்டும் பாக்குநீரிணை மீனவர் தகராறுக்கு தீர்வு காண்பது எவ்வாறு?



ரி. இராமகிருஷ்ணன்

கடந்த வாரம் இலங்கை பாராளுமன்றத்தில் சபை முதல்வரான பிமால் இரத்நாயக்க இலங்கை கடற்பரப்பில் இடம்பெறும் 'சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு' எதிராக 'தீர்க்கமான நடவடிக்கை" எடுக்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்தையும் தமிழ்நாடு மாநில அரசாங்கத்தையும் கேட்டுக்கொண்டார். போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான இரத்நாயக்க ஆளும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. ) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியமான ஒரு தலைவர்.

உள்நாட்டுப்போர், பொருளாதார நெருக்கடி மற்றும் வெள்ளப்பெருக்கு காலப்பகுதிகளில் பொதுவில் இந்திய மத்திய அரசாங்கமும் குறிப்பாக தமிழ்நாடு மாநில அரசாங்கமும் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை நன்றியோடு நினைவுபடுத்திய இரத்நாயக்க, சட்டவிரோத மீன்பிடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடமாகாண தமிழ்பேசும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கு உதவுவதே 'உண்மையான உதவி' என்று தெளிவாகக் கூறினார்.

நீண்டகாலத்துக்கு முன்னரே தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டிய பாக்கு நீரிணை மீன்பிடிப் பிரச்சினை குறித்து அண்மைய வருடங்களில் இலங்கையின் உயர்மட்ட தலைவர் ஒருவர் மிகவும் வலிமையான முறையில் கருத்து தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். 2015 மார்ச்சில் அன்றைய இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கையின் கடற்படை எடுத்த நடவடிக்கையை நியாயப்படுத்தி இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் மீனவர்களை சுடுவது சட்டபூர்வமானதே என்று கூறியிருந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்தின் பிரதிநிதியோ இதுவரையில் இரத்நாயக்கவின் கருத்துக்கு பிரதிபலிப்பை வெளிக்காட்டவில்லை. இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகபட்டினம் மாவட்டங்களையும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் காரைக்கால் மாவட்டத்தையும் சேர்ந்த மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை தேடி சர்வதேச கடல் எல்லை கடந்து செல்வது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

சட்டவிரோத மீன்பிடிக்கு அப்பால் இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளை பயன்படுத்துவது குறித்து வடமாகாண மீனவர்கள் முறையிட்டு வருக்கிறார்கள். கடல்சார் சூழல்தொகுதிக்கு அழிவை ஏற்படுத்துகின்றமைக்காக பரவலாக கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் இந்த இழுவைப்படகு மீன்பிடி கடல்வாழ் உயிரினங்களின் அழிவுக்கும் மீன் இனப்பெருக்க வட்டம் தகர்க்கப்படுவதற்கும் காரணமாக இருந்து வருகிறது. சமச்சீரற்ற பொருளாதார உறவுமுறையும் நிலைவரத்தை சிக்கலாக்குகிறது. அதாவது தமிழ்நாடு மீனவர் சமூகம் வசதிபடைத்ததாக இருக்கின்ற அதேவேளை இலங்கையின் வடமாகாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு தற்போதுதான் நெருக்கடியில் இருந்து மீண்டுவருகிறார்கள்.

பாரம்பரியமான மீன்பிடி முறைகளில் தங்கியிருக்கும் வட இலங்கை மீனவர்கள் மிகையான சுரண்டலில் இருந்து தங்களது கடற்பரப்பை பாதுகாப்பதற்கு நிலைபேறான தீர்வை நாடிநிற்கிறார்கள். அதேவேளை, இந்திய மீனவர்கள் பல காரணிகளினால் நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பாறைகளும் முருகைக் கற்களும் நிறைந்ததாக இருக்கும் இந்திய கடற்பரப்பில் ஒரு சிறிய பிரதேசத்திலேயே மீன்பிடிக்கக்கடியதாக இருக்கிறது.

*1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்கமைப்பு சட்டம் தமிழ்நாடு* கரையோரத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறது. பாக்கு நீரிணைப் பிராந்தியத்தில் தற்போதைய 24 மணி நேர கடற்பயணங்களை போலன்றி, மீனவர்களுக்கான ஒரு மாற்று வழிமுறையாக நீண்டகாலமாகக் கூறப்பட்டுவந்திருக்கும் ஆழ்கடல் மீன்பிடி சுமார் மூன்று வாரங்களை எடுக்கும் என்பதுடன் இயல்பாகவே அது பெரும் செலவும் கடும் உழைப்பும் சம்பந்தப்பட்டதாகும். மேலும், மீன்பிடிக்கு வேறு முறைகளை கையாளுவதென்றால் மீனவர்கள் தங்களது நடத்தைப் போக்கை மாற்றவேண்டியது அவசியமாகும். பாரமாபரியமான ஒரு வாழ்க்கைத் தொழிலில் இது படிப்படியான முறையிலேயே இடம்பெறமுடியும்.

இந்த காரணங்களினாலும் வேறு காரணங்களினாலும் 2017 ஜூலை முதல் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்காக மத்திய அரசாங்கத்தினாலும் மாநில அரசாங்கங்களினாலும் கூட்டாக செயற்படுத்தப்பட்ட திட்டம் தோல்வியடைந்தது. கடல்பாசி வளர்ப்பு, கடல் பண்ணை முறைகளை ஊக்குவிப்பதன் மூலமாக கெடுதியான இழுவைப்படகு நடைமுறையில் இருந்து மீனவர்களை விலகச் செய்வதற்கு இந்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பாக்கு நீரிணையில் 1600 கோடி ரூபா ஆழ்கடல் மீன்பிடித் திட்டத்தையும் 20,050 கோடி ரூபா பிரதான மந்ரி சம்பத ஜோயனா திட்டத்தையும் இணைப்பதே மத்திய அரசாங்கம் குறைந்தபட்சம் செய்யக்கூடிய காரியமாகும். இது கூடுதலான அளவுக்கு ஆழ்கடல் மீன்பிடியில் மீனவர்கள் ஈடுபடுவதற்கு உதவும்.

இந்த பிரச்சினையின் சிக்கலான தன்மையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது திடீரென்று மீனவர்களின் மீன்பிடி முறையில் மாற்றத்தைக் கொண்டுவருவது எந்த அரசாங்கத்துக்கும் சுலபமான வேலையாக இருக்கப் போவதில்லை என்பதை இரத்நாயக்க தெரிந்திருக்க வேண்டும். இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு பேச்சுக்களுக்கு ஏற்பாடு செய்யும் விடயத்தைப் பொறுத்தவரை, தனது அரசாங்கத்தின் மனோபாவம் பற்றி அவர் எதையும் கூறவில்லை.


மீனவர்களுக்கு இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை இந்திய மத்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும் விரும்பியிருந்தன். இந்த பேச்சுக்கள் இறுதியாக 2016 நவம்பரில் புதுடில்லியில் இடம்பெற்றன.

கடந்த வருடம் அக்டோபரில் கொழும்பில் நடைபெற்ற கூட்டுச் செயல்பாட்டு குழுவின் கூட்டத்தில் இந்தியா இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவரைச் சந்தித்திருந்த வடமாகாணத்தைச் சேர்ந்த மீனவர் தூதுக்குழு ஒன்றும் கூட இந்திய மீனவர்களுடன் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனம் சாதித்து வருவது ஆச்சரியத்தை தருகிறது. அந்த அரசாங்கம் பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் கூட கடந்துவிடாத நிலையில் அதன் மனோபாவம் குறித்து பெரிதாக எதுவும் குறிப்பிடுவதற்கில்லை.

இந்தியாவின் கிழக்கு கரையோரத்தில் மீன்பிடிப்பதற்கு வருடாந்தம் விதிக்கப்படும் இரு மாதகாலத் தடை ஏப்ரல் நடுப்பகுதியில் வழமைபோன்று தொடங்கவிருக்கும் நிலையில், அடுத்த சில மாதங்கள் பேச்சுக்களை நடத்துவதற்கு வாய்ப்பான காலப்குதியாக இருக்கும். ஜே.வி.பி.யின் மூத்த தலைவர்களில் ஒருவரான இரத்நாயக்க இழுவைப்படகு மீன்பிடி நடைமுறைக்கு முடிவொன்றைக் கட்டுவதற்கு இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வழிவகுக்கக்கூடிய பேச்சுக்களுக்கான அவசியம் குறித்து அரசாங்கத்திலும் அதற்கு வெளியிலும் இருக்கும் தனது சகாக்களை நம்பவைத்தால் பயனுடையதாக இருக்கும்.

ஏப்ரலில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பிரதமர் நரேந்திர மோடி மீனவர் தகராறு குறித்து கொழும்பு பேச வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன் கூறியிருக்கிறார். அப்போது மீனவர்களுக்கு இடையிலான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதை ஆதரிப்பதற்கு மாத்திரமல்ல அந்த பேச்சுக்களை இலங்கையிலேயே நடத்த முன்வருவதற்கும் உன்னதமான சந்தர்ப்பம் ஒன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு கிடைக்கும்.

(தி இந்து)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசியலில் தன்னால் சாதித்துக்காட்ட முடியும் என்று நம்பும் விஜய் கவனிக்கத் தவறும் விடயங்கள்!

எஸ். குமரேசன்

தமிழக வெற்றிக்கழகத்தின் முதலாவது வருட நிறைவைக் கொண்டாடுவதற்கு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பேசிய அதன் தாபக தலைவரும் நடிகருமான விஜய் அவரால் அரசியலில் பெரிதாக ஒன்றும் சாதித்துவிட முடியாது என்று கூறுபவர்களுக்கு பதிலடி கொடுக்கும் ஒரு முயற்சியாக 2026 தமிழக சட்டசபை தேர்தலில் பெருவெற்றியை பெறுவது குறித்து கட்சித் தொண்டர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்காக 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக்கழகமும் 1977ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அடைந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் வெற்றிகளை தனது கட்சி அடையப் போவதாக அவர் நம்பும் வெற்றியுடன் சமாந்தரம் வரைந்தார்.







தமிழக வெற்றிக் கழகத்தின் அனுபவ மினமையும் அதில் அதிகப் பெரும்பான்மையாக இளைஞர்களின் பிரசன்னமும் தேர்தலில் கட்சியின் வெற்றி வாய்ப்புகளுக்கு தடையாக இருக்கும் காரணிகள் என்று பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள். அவ்வாறு நம்பிக்கையீனமாக பேசுபவர்களை அலட்சியம் செய்யுமாறு கட்சித் தொண்டர்களை கேட்டுக்கொண்ட விஜய், திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் புதிய கட்சிகளாக இருந்தபோது அவற்றின் தலைவர்களாக சி.என். அண்ணாத்துரை யும் எம்.ஜி. இராமச்சந்திரனும் பெருமளவில் இளைஞர்களின் ஆதரவுடன் சாதித்துக் காட்டியதைப் போன்ற வெற்றியை தனது கட்சியும் பெறும் என்று கூறினார்.

ஆனால், பல வருட கால கடுமையான உழைப்பும் விவேகமான திட்டமிடலும் முக்கியமாக அரசியல் அணிதிரட்டலுமே 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினதும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினதும் மகத்தான தேர்தல் வெற்றிகளுக்கு வழி வகுத்தன என்பதை விஜய் வேண்டு மென்றே கவனிக்கத் தவறுகிறார் போன்று தெரிகிறது.

1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலத்தில் தெளிவான பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய முதல் பிராந்தியக் கட்சியாக வந்தது. அதை இரவோடிரவாக கிடைத்த ஒரு வெற்றி அல்ல.

திராவிட இயக்கம் பல வருடங்களுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டது என்கிற அதேவேளை, 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது ஏற்கெனவே அது 18 வயதைக் கொண்டதாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்கான பெருமை அண்ணாவையே சாரும். அவர் தனது மதிக்கூர்மையை பயன்படுத்தி பலம்பொருந்திய தொண்டர் படையைக் கொண்ட இயக்கமாக கட்சியைக் கட்டியெழுப்பி, வட இந்தியாவினதும் பார்ப்பனியத்தினதும் 'மேலாதிக்கத்துக்கு' எதிரான இலட்சியத்தை நோக்கி மக்களை அணிதிரட்டுவதற்கு சினிமா, நாடகம் மற்றும் பத்திரிகைகள் என்று ஊடகங்களை ஆற்றல் வாய்ந்த முறையில் பயன்படுத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் முதல் தடவையாக 1957 சட்டசபை தேர்தலில் போட்டியிட்டது. அப்போது அதன் வேட்பாளர்கள் சயேச்சைகளாகவே போட்டியிட்டு 15 ஆசனங்களைக் கைப்பற்றினர். 1967 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னதாக 1962 சட்டசபை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 50 ஆசனங்களைக் கைப்பற்றியது.1967 தேர்தலில் அது நடைமுறைச் சாத்தியமான அரசியலில் இறங்குவதற்கு தயக்கம் காட்டவில்லை. பரமவைரியான முன்னாள் முதலமைச்சர் சி. இராஜகோபாலாச்சாரியார் தலைமையிலான சுதந்திரா கட்சியுடன் கழகம் கூட்டணி அமைத்துக்கொண்டது.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த எம்.ஜி.ஆரை கொலை செய்வதற்கு பழம்பெரும் நடிகரான எம்.ஆர்.ராதா மேற்கொண்ட முயற்சியின் விளைவாக ஏற்பட்ட 'அனுதாப அலையே' வெற்றிக்கு காரணம் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள். அது நிச்சயமாக ஒரு மிகைப்படுத்தலாக இருந்த போதிலும், கொலைமுயற்சி சம்பவத்தை அரசியல் அனுகூலத்துக்காக திராவிட முன்னேற்றக் கழகம் பயன்படுத்தத் தவறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. துப்பாக்கிச் சூட்டுக்காயத்துக்காக எம்.ஜி.ஆர். கழுத்தில் கட்டுப்போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரி கட்டிலில் இருக்கும் படங்களுடனான சுவரொட்டிகளை மாநிலமெங்கும் ஒட்டி திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியில் அனுதாபத்தை தேடிக்கொண்டது.

எம்.ஜி.ஆர். 1972 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட உடனடியாகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார். அந்த கட்சி எதிர்நோக்கிய முதல் சட்டசபை தேர்தலிலேயே வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்தது. ஆனால், விஜயைப் போன்று அரசியலுக்கு புதியவராக இருக்கவில்லை. ஏற்கெனவே பல வருடங்களாக அரசியலில் ஆழமான ஈடுபாட்டைக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒருவராக திரைப்படங்கள் மூலமாக பொதுமக்கள் மத்தியில் தனக்கென்று ஒரு படிமத்தை வெகு சாதுரியமாக ஏற்படுத்திக் கொண்டார். திரைப்டங்களில் தனது பாத்திரங்களை மாத்திரமல்ல, படங்களின் பெயர்களையும் பாடல்களையும் கதைவசனங்களையும் மிகவும் கவனமாக தெரிவு செய்து அசைக்கமுடியாத இரசிகர் பட்டாளத்தை தனக்கென்று எம்.ஜி. ஆர். உருவாக்கிக் கொண்டார்.

அவர் ஏற்கெனவே குறைந்தது 25 வருடகால அரசியல் வாழ்வைக் கொண்டிருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக எம்.ஜி.ஆர். 1957, 1962, 1967, 1971 தேர்தல்களில் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். 1962 ஆம் ஆண்டில் சட்டமேலவை உறுப்பினராக வந்த அவர் முதல் தடவையாக 1967 சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராக தெரிவானார். கட்சிக்குள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த எம்.ஜி. ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட வேளையில் அதன் மூன்றாவது உயர்ந்த பதவியான பொருளாளர் பதவியை வகித்தார்.

1977 சட்டசபை தேர்தலில் மகத்தான வெற்றியை பெறுவதற்கு முன்னதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1973 ஆம் ஆண்டில் திண்டுக்கல் லோக்சபா தொகுதியில் இடைத்தேர்தலில் வெற்றிபெற்றது மாத்திரமல்ல, 1974 ஆம் ஆண்டால் புதுச்சேரி சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று அங்கு அரசாங்கத்தை அமைத்தது. 1977 பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு பாராளுமன்ற ஆசனங்களையும் அண்ணா தி.மு க. கைப்பற்றியது.

நன்றாக கட்டமைக்கப்பட்ட எம்.ஜி. ஆர். இரசிகர் மன்றங்கள் பரந்தளவில் அரசியல் அனுபவத்தைக் கொண்டிருந் தன. அத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து முக்கிய தலைவர்கள் சிலரை தன்பக்கம் இழுப்பதில் எம்.ஜி. ஆருக்கு இருந்த ஆற்றல் அவரது கட்சிக்கு பெருமளவில் உதவியது.

அண்ணாவும் எம்.ஜி. ஆரும் தங்களது எழுத்துக்கள், ஊடகங்கள் மற்றும் நுற்றுக் கணக்கான பொதுக் கூட்டங்கள் மூலமாக மக்களை கவர்ந்திழுக்கும் செயல்பாடுகளை தொடர்ச்சி யாக முன்னெடுத்தார்கள். அவ் வாறு செய்யாமல் விஜய் அந்த தலைவர் களுடன் தன்னை ஒப்பிடுவது பொருத்த மானதே அல்ல. தலைவர்கள் எந்தளவு பெரியவர்களாக இருந்தாலும், பொதுக் கூட்டங்களில் மக்கள் சிறிய துண்டுக் காகிதங்களில் கேள்வி களை எழுதி மேடை களுக்கு அனுப்புகின்ற ஒரு பொதுவான நடைமுறை 1980 கள் வரை இருந்ததாக பழையவர்கள் கூறுவார்கள்.

இதற்கு மாறாக, கட்சியை தொடங்குவதற்கு முன்னதாக அரசியல் குறித்த விஜயின் விருப்பமும் விளக்கப்பாடும் எத்தகையது என்பது எவருக்கும் தெரியாது. கட்சியை தொடங்கிய பிறகு இதுவரையில் விஜய் நான்கு அல்லது ஐந்து சந்தர்ப்பங்களில் மாத்திரமே பொது உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். அந்த உரைகளும் கூட முன்னேற்பாடு இன்றி பேசுவது போன்ற பாணியில் இருந்தாலும் அவை ஏற்கெனவே தயாரிக்கப்பட்டவை தான்.

விஜய் இன்னமும் ஊடகங்களை கையாளத் தொடங்கவில்லை என்பது முக்கியமாக கவனிக்கவேண்டிய ஒரு அம்சமாகும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவர்களும் ஊடகங்களை கையாளுவதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. அந்த செயபாடுகளில் அவர்கள் தீவிர அக்கறை காட்டினார்கள். (நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** 'தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக பல்வேறு சதிவலைகள் பின்னப்படுகின்றன. அதிலும் தமிழ் அரசுக் கட்சியை எப்படியாவது சிதைத்து - உடைத்து - கட்சியை பிளவுபடுத்தி விடவேண்டுமென சிலர் செயல் படுகின்றனர். இந்த அடிப்படையில் புதிய தமிழ் அரசு கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகிறது.



உண்மையில் அப்படியாக கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை" என்று தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்திருக்கிறாரே. அதாவது கட்சிக்கு எதிராக சதி வலையை பின்னுபவர்கள் கட்சிக்கு வெளியே இருப்ப தாக அவர் கூறுவதாக தெரி கின்றது. அப்படி யாராவது கட்சியை சிதைக்க முயல்வ தாக நீங்கள் அறிந்தீர்களா?.

**வியுக்தியார்:** கட்சியை பிளவுபடுத்திவிட சிலர் செயல்படுகிறார்கள் என்று சிவஞானம் ஐயாவே வெளிப் படையாக செல்லிவிட்டாரே. அந்தச் சிலர் பற்றியும் அவர் நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார் என்றே நினைக் கின்றேன். கட்சியின் தலைவராக இருந்த மறைந்த மாவை சேனாதிராசா, கட்சியை பலவினப் படுத்துகிறார் என்று கவலைப்பட்ட கட்சிக்காரர்கள், அவர் பதவிவில குவதாக நட்பு ரீதியாக சிறிதரன் எம்.பி.க்கு எழுதிய கடிதத்தை வைத்துக்கொண்டு அவரை கட்சித் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டு பதில் தலைவராக சிவஞானம் ஐயாவை நியமித்தபோது, கட்சியில் இனியாவது சில மாற்றங்கள் வரும், இரண்டு அணிக ளாக பிளவுண்டு போயிருக்கும் கட்சியை அவரா வது ஒன்றுபடுத்துவார் என்று பார்த்தால், அவரும் தொடர்ந்து கட்சிக்குள் பிளவை அதிகரிப்பதாகவே தெரிகின்றது. நம்மத்தியில் இருக்கும் சிறந்த நிர்வாகி களில் ஒருவரான அவரும் இப்போது சாதாரண அரசி யல்வாதியாக மாறிவிட்டதுதான் இதற்கு காரணம் என்று நினைக்கின்றேன். கட்சியை சிதைக்க முயல்ப வர் கள் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? என்று கேட்டி ருக்கின்றீர்கள், அதுதான் பதில் தலைவரே அறிந்து வைத் திருக்கின்றபோது நான் அறிந்துதான் என்ன நடக்கப் போகின்றது.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** 'எமது தனித்து வத்தை இல்லாமலாக்கும் முயற்சி யில் பிற கட்சிகள் செயல்பட் டன. இதனால், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கட்சி தனித்துப் போட்டியிடும்" - என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் க. வி. விக்னேஸ் வரன் தெரிவித் துள்ளாரே.



கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள் தனித்தனியாக களம் இறங்கிய தால் தான் பாரிய தோல்வியைச் சந்தித்தன என்று கூறப்பட் டது. அதனால் அந்த தோல்வியின் பின்னராவது கட்சிகள் மீண்டும் ஒற்றுமையாக ஓரணியாக போட்டி யிடும் என்றுதான் தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் இப்படி தத்தமது தனித்துவத்தை பற்றி யல்லவா பேசிக்கொண்டிருக் கிறார்கள்.?

**வியுக்தியார்:** அவரது தனித்துவத்தை இல்லாமல் ஆக்கும் முயற்சியில் பிற கட்சிகள் செய்பட்டன என்று விக்கினேஸ்வரன் ஐயாவே சொல்லும்போது, அந்தப் பிற கட்சிகள் எவை? ஏன் அப்படிச் செய்கின்றன என்றெல்லாம் நாம் ஆராயவேண்டிய தேவை இருக்காது தானே. ஆனால் அது என்ன அவரது தனித்துவம் என்ப தைதான் ஆராயவேண்டியிருக்கின்றது. நான் அறிந்த வரையில் தமிழ் கட்சிகள் எல்லாமே, அதிகம் ஏன் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கூட மத்தியில் கூட் டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்றுதான் கூறு கின்றது. அதாவது கட்சிகள் எல்லாவற்றின் கொள்கை யும் தமிழ் மக்கள் தமக்கென்று ஒரு சமஷ்டிக் கட்ட மைப்பில் வாழவேண்டும் என்பதுதான். அப்படி இருக் கும்போது அவரது கட்சியின் தனித்துவம் என்று அவர் சொல்வது, சிலவேளை அவர் கணவனை இழந்த இளம்பெண் ஒருவருக்கு உதவுவதற்காக மதுபான சாலைக்கு லைசென்ஸ் எடுத்துக்கொடுத்ததோ, அல்லது அவரோடு முன்னர் கட்சியில் முக்கியத்தவராக இருந்த அருந்தவ பாலன் சொன்னதுபோல, அவர் மற்றக் கட்சியில் இருப்பவர்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்று பார்ப்பதை சொல்கிறாரோ தெரியவில்லையே. அவர் தனது தனித்துவம் என்ன என்று வெளியே சொன்னால் தானே நமக்கு அது புரிவதற்கு. அவர் கட்சி தனித்துப் போட்டியிடுவதன் மூலம் இந்தத் தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியை தெளிவாக சொல்லும்: 'தமிழ் மக்கள் கூட்டணிக்கும் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் இருக்கிறார்கள்".

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் நம்பிக்கை வெளியிட்டுள் ளாரே.




கடந்த பாராளுமன்ற தேர்தலில் அவர்களின் தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனால் அந்த வாக்கு களை அப்படியே உள்ளூ ராட்சி சபைகளில் பெற்றாலும் கூட அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்க முடியுமா? உள்ளூ ராட்சி தேர்தல் முறையில் அனைத்து வட்டாரங்களையும் வென்றால் கூட தனித்து ஆட்சிய மைக்க முடியாது என்றுதானே தமிழ் அரசு கட்சி கடந்த தேர்த லில் தனித்து களம் இறங்கும் முடிவை எடுத்தது. இவர் கள் எப்படி தாங்களே ஆட்சியமைப்போம் என்கிறார் கள்?.

**வியுக்தியார்:** நீங்களே சொல்வதுபோல அவர்களே கடந்த பாராளுமன்ற தேர்தலில் பெற்றதுபோல அதிக வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றாலும் ஆட்சிய மைக்க போதுமானதைப் பெறுவார்களா என்பதில் எனக்கும் சந்தேகம் இருக்கின்றதுதான். ஆனால் தேர்தல் முடிந்ததும், மற்றைய கட்சிகளிலும் சுயேட்சைக்குழுக்க ளாகவும் போட்டியிடுகின்றவர்களிலும் ஒருவர் இரு வராக வெற்றிபெறத்தான் போகின்றார்கள். இந்த தேர் தல் முறைமையே அப்படித்தானே. அவ்வாறு வெற்றி பெறுகின்றவர்கள் தங்களுக்கு, தாங்கள் கேட்காமலே ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை சந்திரசேகரு க்கு இருக்காதா என்ன?. தமிழ் அரசு கட்சியின் உறுப்பி னர் ஒருவரே தமது மேயர் வேட்பாளரை 'கவிழ்த்து" மாற்றுக்கட்சி வேட்பாளரை யாழ்ப்பாண மாநகர சபையில் மேயராக்கியபோதும் சந்திரசேகர் யாழ்ப்பா ணத்தில் தானே இருந்தார். அவர்களுக்கு உதவுவதற்கா கவே களத்தில் நிற்கும் கட்சிகள், தேர்தலின் பின்னர் தமது உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்வதையே காணப்போகின்றோம்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாநகர முதல்வர், நகர பிதா, மற்றும் தவிசா ளர் யார் என்பதை முன்னரே அறிவிப்பதில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என்றும், இதனால், அந்தப் பதவிகளுக்கு உரியவர்களின் பெயர் தேர்தலுக்கு பின்னரே அறிவிக்கப்படும் என்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** அவர் அவ்வாறு தெரிவித்திருப்பதில் என்ன தவறைக் கண்டீர்கள்?. அவர் ஒரு சட்டத்தரணி. சரியாகத்தானே சொல்லியிருக்கிறார். தேர்தல் முடிவ டைந்த பின்னர்தானே முதல்வரை அறிவிக்கமுடியும். அதாவது வெற்றிபெறுகின்ற கட்சிதானே அதனைச் செய்யமுடியும். அவர் தமது கட்சிசார்பில் முதல்வர் வேட்பாளராகவோ, தவிசாளர் வேட்பாளராகவோ யாரையும் அறிவிக்கப்போவதில்லை என்று சொல்ல வில்லையே. அதனால்தான் அவர் முதல்வர் யார் என்பதை தேர்தலின் பின்னரே அறிவிப்போம் என்கி றார். அது கூட அவரது கட்சி வெற்றிபெற்றால்தானே அவர் அதனையும் அறிவிக்கவேண்டியிருக்கும். ஆனால் தேர்தலுக்கு முன்னரே தமது மேயர் வேட்பாளர் யார் என்றோ, அல்லது தவிசாளர் வேட்பாளர் யார் என்றோ அறிவிப்பதில்லை என்று தமிழ் அரசு முடிவெடுத்தி ருப்பது எதனால் என்று அந்தக் கட்சியை தெரிந்தவர்க ளுக்கு தெரியும்தானே. முதலிலே அறிவித்தால், அவர் கள் கட்சியிலிருந்து பலர் வெளியேறி தனித்தனியாக கேட்டுவிடுவார்களே. எல்லோரையும் நீதான் மேயர். நீதான் தவிசாளர் என்று நம்பிக்கைகொடுத்து வைத்தி ருந்தால்தானே எல்லோரும் கடுமையாக தேர்தலில் களப்பணி ஆற்றுவார்கள்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** வடக்கில் படையினரால் நடத்தப்படும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான சம்பளம் வழங்கப்படுகின்ற போதும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகின்றது.



முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் குறைந்தது பாதுகாப்பு படை யினருக்கு வழங்கப்படுவதற்கு சமாந்தரமான சம்பளத்தை வழங்க வேண்டும். இல்லை யென்றால் இராணுவ மயமாக்க லாகவே இதனைக் கருத வேண்டிவரும். வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஏன் இந்த நிலைமை. இதை மாற்ற வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கி றாரே. இது உண் மையா? அப்படி யெனில் இது ஒரு அநியாயமான வேலை அல்லவா?

**வியுக்தியார்:** படையினரால் நடாத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இப்படி அதிக சம்பளம் வழங்கப்படுகின்ற சங்கதி நமது கஜேந்திரகுமார் எம். பி.க்கு இப்போதுதான் தெரியவந்திருக்கின்றது என்று நினைக்கின்றேன். அல்லது இதுபோன்ற சமூக பிரச்சி னைகளை அவர் இப்போதுதான் பாராளுமன்றில் பேசு கிறார் என்பதால் இப்போது போசுகிறாரோ தெரிய வில்லை. எல்லாம் கடைசி பாராளுமன்ற தேர்தலில் மக்கள் கொடுத்த பாடம் என்று நினைக்கின்றேன். அதனால்தான் அண்மைக்காலங்களில் நமது தமிழ் தேசிய எம்.பி.க்களும் அபிவிருத்தி பற்றியும் சமூகம் எதிர்கொளும் பிரச்சினைகள் பற்றியும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். படையினர் நடாத்தும் முன்பள்ளிகளில் பணியாற்றும் அசிரியர்களை முன்னர் துரோகிகள் என்றவர்கள் இப்போது, அவர்களுக்கு கொடுக்கின்ற சம்பளத்தை மற்றைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்கிறார்கள். அவர்கள் (படையினர்) தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் முன்பள்ளிகளை நடாத்தி அதில் பணியாற்றுகின்றவர் களுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். நமது மாகாண சபைகள் இயங்கியபோது கூட இதுகுறித்து அவர்கள் சிந்தித்திருக்கலாம். அதனை ஒழுங்குபடுத்தி அதற்கான நியதிச்சட்டங்களை இயற்றியிருக்கலாம் என்கிறார் முன்னாள் மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர். நமக்கு குறை செல்ல மட்டும்தானே முடியும்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் இனியும் ஒற்றுமையாக இல்லாவிட்டால் வடக்கில் தென்னிலங்கைக் கட்சிகள் பலம் பெறும் நிலை ஏற்படும் என்று கொழும்பு பல்கலைக்கழ சட்டபீடத்தின் பேரா சிரியர் சர்வேஸ்வரன் எச்சரித்துள்ளாரே. அவர் எச்ச ரிக்கை செய்த பின்னரும் நமது அரசியல் கட்சிகள் அதனை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லையே. அவர்களும் மறைமுகமாக தென்னிலங்கைக் கட்சிக ளுக்காகத்தான் வேலைசெய்கிறார்களோ?

**வியுக்தியார்:** இவரைப்போன்ற அரசியல் விமர்ச கர்கள் தமது விமர்சனங்களை முன்வைக்கலாமே தவிர அரசியல் செய்ய முன்வரக்கூடாது, அரசியல் விடயங் களை அரசியல்வாதிகள் நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்று நமது அரசியல் கட்சியொன்றின் முக்கியஸ்தவர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னரே மேடைபோட்டு பகிரங்கமாக கூறியிருந்தாரே. அதாவது விமர்சகர்கள் என்ன சொன்னாலும் நாங்கள் கண்டுகொள்ளப்போவ தில்லை, நாங்கள் எங்களுக்கு சரி என்று பட்டதை செய் வோம் என்கிறார்கள். நீங்கள் சந்தேகம் கொள்வதுபோல அவர்களும் தென்னிலங்கைக் கட்சிகள் பலம்பெறுவ தைத்தான் விரும்புகின்றார்களோ என்னவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரவாதமற்ற உக்ரைன் போர் நிறுத்தம்: சர்வதேச அமைதி காக்கும் படை சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்க முன்வைத்த போர் நிறுத்த திட்டத்தை இரு நாடுகளும் நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளன. ஆனாலும் இதுவரை இப்போர் முடிவுக்கு வர ரஷ்யாவோ அல்லது உக்ரைனோ தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளவில்லை என்பது தெட்டத் தெளிவாக தெரிகிறது.

ஏனெனில் இருதரப்பும் முன்னைய போர் நிறுத்த காலத்தில் தம்மை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இது இம்முறையும் வெளிப்படையாகவே தெரிகிறது.

எவ்வாறாயினும் இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது - என்ன இல்லை என்பதனை அலசும் ஓர் பார்வையாகும்.

இந்த போர் நிறுத்தத்தை கண்காணிக்க உக்ரைனில் சர்வதேச அமைதி காக்கும் படையை ரஷ்யா ஏற்றுக் கொள்ளாது என தெரிவித்துள்ளது.

நேட்டோ படைகளின் அதிகாரப்பூர்வ ஈடுபாடானது, ரஷ்யாவிற்கு எதிரான படைகளாகவே மாஸ்கோ பார்க்கும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் அண்மையில் கூறியுள்ளார்.

சமரசம் செய்வதற்கு எந்த இடமும் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். நேட்டோ படைகள் ரஷ்யாவுடன் வெளிப்படையான விரோத நோக்கத்துடன் செயல்படுகின்றன என்று லாவ்ரோவ் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைதி காக்கும் படைகளை தவிர்க்க, புட்டின் அமெரிக்க போர் நிறுத்த திட்டத்தை ஆதரிக்கிறார் என்றும், ஆனால் மோதலுக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்ய நீண்டகால அமைதிக்கான உத்தரவாதங்களை வலியுறுத்துகிறார் என்றும் கூறப்படுகிறது.

ஆனாலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விவரங்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் எந்தவொரு போர் நிறுத்தமும் நீண்டகால அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் புட்டின் கோரியுள்ளார்.

போரை நிறுத்துவதற்கான திட்டங்களுடன் நாங்கள் உடன்படுகிறோம் என்றும், ஆனால் இந்த நிறுத்தம் நீண்டகால அமைதிக்கு வழிவகுக்கவும், இந்த நெருக்கடியின் காரணங்களை நீக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாம் நமது அமெரிக்க சகாக்களுடனும் கலந்து பேச வேண்டும். இந்த நேரத்தில் இந்த யோசனை சரியானது. நாங்கள் நிச்சயமாக இதை ஆதரிக்கிறோம். ஆனால் நாம் விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் இன்னும் பல உள்ளன என்று புட்டின் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறுகையில், புட்டினின் சாதகமான பதில் மிகவும் நம்பிக்கைக்குரியது. ஆனால் அது முழுமையாக இல்லை என்றும் ரஷ்யத் தலைவரைச் சந்திக்கவோ பேசவோ தாம் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை போர் நிறுத்தத்திற்கு ஆதரவளிக்கும் வேளையில், தெளிவுபடுத்த வேண்டிய பல பிரச்னைகளையும் புட்டின் பட்டியலிட்டார்.

ரஷ்யாவுடனான போரில் உடனடி முப்பது நாள் போர் நிறுத்தத்திற்கான அமெரிக்க முன்மொழிவை ஏற்கத் தயாராக இருப்பதாக உக்ரைனும் கூறியுள்ளது.

சவூதி நகரமான ஜெட்டாவில் அமெரிக்க - உக்ரைன் அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விவரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை.

அங்கு வெளியிடப்பட்ட ஒரு கூட்டு அறிக்கையின் படி உக்ரைன் உடனடி இடைக்கால முப்பது நாள் போர் நிறுத்தத்தை அமல்படுத்த தயாராக உள்ளது. அதை



மேலும் நீட்டிக்க முடியும் என்றும் கூறியுள்ளது.

இது உக்ரைன் அரசின் ஆரம்ப வான் மற்றும் கடல் போர் நிறுத்தத்திற்கான முந்தைய பரிந்துரையை விட அதிகமாக உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்த ஒப்பந்தம் முழுமையான போர் நிறுத்தத்திற்கானது என்று தெரிவித்துள்ளார்.

ட்ரம்புக்கும் உக்ரைனின் தலைவர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கும் இடையிலான ஓவல் அலுவலக மோதலுக்குப் பிறகு, அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான உறவை சரிசெய்வதில் இந்த பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் கவனம் செலுத்தின.

இந்தப் பேச்சுவார்த்தை மூலம் வாஷிங்டன் உடனடியாக உளவுத்துறை பகிர்வு மீதான இடைநிறுத்தத்தை நீக்கி, உக்ரைனுக்கு பாதுகாப்பு உதவியை மீண்டும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், ஜெலென்ஸ்கியின் முக்கிய கோரிக்கை என்னவென்றால், அமெரிக்க அரசு உடனடியாக உக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்க கோரியுள்ளது. இதன் அடிப்படையில் ரஷ்யா எந்தவொரு போர்நிறுத்தம் அல்லது அமைதி ஒப்பந்தத்தையும் கைவிடாமல் இருக்க வேண்டும் என்று உக்ரைன் விரும்புகிறது.

உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் என்ற சொற்றொடர் இந்த கூட்டு அறிக்கையில் இல்லை. இது உலகத் தலைவர்களால் கவனிக்கப்பட்டது. பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஜெட்டா பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பாராட்டினார். ஆனால் உக்ரைனுக்கு வலுவான பாதுகாப்பு உத்தரவாதங்கள் தேவை என்று எச்சரித்தார்.

போர்நிறுத்தத்தில் போர்க் கைதிகளின் பரிமாற்றம், பொதுமக்கள் கைதிகளை விடுவித்தல் மற்றும் உக்ரேனிய குழந்தைகளை ரஷ்யாவிற்குத் திருப்பி அனுப்புதல் ஆகியவை அடங்கும்.

இந்த பேச்சுக்குப் பிறகு ஜெலென்ஸ்கி தனது தொலைக்காட்சி அறிக்கையில், உக்ரைன் அமைதியைத் தேடுவதில் உறுதியாக இருப்பதாகவும், ஆனால் ரஷ்யாவை அவ்வாறு செய்ய சமாதானப்படுத்துவது அமெரிக்காவின் பொறுப்பாகும் என்றும் கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, பந்து இப்போது ரஷ்யாவின் கைகளில் இருப்பதாகக் கூறினார்.

தற்காலிக போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதா அல்லது ட்ரம்ப் நிர்வாகத்துடனான உறவுகளை மோசமாக்கும் அபாயத்தை ஏற்படுத்துவதா என்பதை விளாடிமிர் புட்டின் இப்போது முடிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

போர்நிறுத்தம் உக்ரேனிய துருப்புக்களுக்கு, குறிப்பாக ரஷ்யாவின் கூர்ஸ்க் பிராந்தியத்தில், ஆயுதங்களைப் மேலும் பெறுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தப்படாது என்பதற்கான உத்தரவாதங்களை ரஷ்யா கோருவதாக புட்டின் வேண்டியுள்ளார்.

இந்த விவகாரத்தில் போர்நிறுத்தத்தை யார் கண்காணிக்கப் போகிறார்கள் என்பதையும் மாஸ்கோ விவாதிக்க விரும்புகிறது என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியுடன் விரைவில் பேசப் போவதாக புட்டின் கூறியதுடன், ரஷ்யா இந்த மோதலை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஆதரவாக உள்ளது என்பதை உறுதி செய்துள்ளார்.

புட்டின் இந்த படையெடுப்பை உக்ரைனின் நேட்டோ இராணுவ மயமாக்கலை எதிர்க்கும் நோக்கமாகக் கொண்ட ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கை என்று விவரித்துள்ளார்.

நேட்டோ இராணுவக் கூட்டணியின் ஒரு பகுதியாக மாறுவதற்கான கோரிக்கையை உக்ரைன் கைவிட வேண்டும் என்றும், நாட்டின் தென்கிழக்கில் பகுதியளவு ஆக்கிரமிக்கப்பட்ட நான்கு உக்ரேனியப் பகுதிகளை ரஷ்யா இணைத்ததை கீவ் அரசு அங்கீகரிக்க வேண்டும் என்றும் ரஷ்யத் தலைவர் கோரியுள்ளார்.

தற்போதய கள நிலவரப்படி ரஷ்யப் படைகள் கிழக்கு உக்ரைனில் தொடர்ந்து முன்னேற்றங்களை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டில் உக்ரேனிய துருப்புக்கள் ஒரு திடீர் ஊடுருவலில் கைப்பற்றிய ரஷ்ய பிராந்தியமான கூர்ஸ்க்கில் உள்ள பிரதேசத்தை மீண்டும் ரஷ்யா முழுமையாக கைப்பற்ற முயல்கின்றது.

# வேலையைப் பிடுங்கிக் கொள்ளுமா செயற்கை நுண்ணறவு?



கேணல் ஆர். ஹரிஹரன்

ஏ.ஐ. என்று சொல்லப்படும் செயற்கை நுண்ணறிவு தற்போது அதிகம் பேசு பொருளாகிவிட்டது. எளிதாக விளக்கம் கூறினால் ஏ.ஐ. என்பது இயந்திரங்கள் மனிதர்களைப் போல கற்றுக் கொள்ளவும், பகுத்தறிந்து செயல்படவும் அனுமதிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும். ஏ.ஐ. அமைப்புகளால் தரவைச் செயலாக்கவும், சிக்கல்களைத் தீர்க்கவும், அவற்றின் நடத்தையை மாற்றியமைக்கவும் முடியும்.

ஏ.ஐ உபயோகம். ஏற்கனவே அசுர வேகத்தில் அதிகரித்து வருவதால் அதனால் எத்தகைய தாக்கம் ஏற்படும் என்று அறிவதில் எல்லா நாடுகளும் நாட்டம் காட்டி வருகின்றன. அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்தின் போது இந்தியாவும் அமெரிக்காவும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்டுள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று ட்ரஸ்ட் (வுசுருளுவு) என்று கூறப்படும் “மூலோபாயத் தொழில் நுட்பத்தை பயன்டுத்தி உறவை மாற்றுதல்” ஒப்பந்தமாகும். இதன்படி இந்தியாவும் அமெரிக்காவும் இந்த ஆண்டு இறுதிக்குள் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) உள்கட்டமைப்பை விரைவுபடுத்துவதற்கான வரைபடத்தைத் தயாரிக்க முடிவு செய்துள்ளன. அதன் செயலாக்கம் பாதுகாப்பு, எரி சக்தி, விண்வெளி ஆகிய துறைகளைத் தவிர உயர் தொழில் நுட்பத்துறையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆகவே அடுத்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு துறைகளின் செயல்முறைகளில் மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

இதனால் தற்போதைய வேலைகளில் பெரும் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் உலக அளவில் வேலை வாய்ப்பில் எத்தகைய மாற்றம் ஏற்படும் என்பதை அனுமானிக்க கடந்த ஜனவரி 7 ஆம் தேதி உலக பொருளாதார மன்றம் வேலைகளின் எதிர்கால அறிக்கை: 2025 என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை உலகில் உள்ள 22 தொழில்கள் சார்ந்த 1000-க்கும் மேற்பட்ட நிறுவனங்களை ஆய்வு செய்த பிறகு தயார் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையில் 2030 ஆம் ஆண்டுக்குள் உலகில் வேகமாக வளர்ந்து வரும் மற்றும் குறைந்து வரும் வேலைத் துறைகளின் பட்டியல்கள் உள்ளன. இவை வரும் ஆண்டுகளில் உலக சந்தையின் பல்வேறு தொழில்களில் வேலைகளின் போக்குகள் மற்றும் அவற்றில் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் விவரிக்கின்றன. மக்கள் தொகை மாற்றங்கள், புவிசார் அரசியல் மோதல்கள் இதில் பெரும் பங்கு வகிக்கின்றன. வரும் ஆண்டுகளில் எந்தெந்த தொழில்கள் ஆதிக்கம் செலுத்தும் என்பது குறித்து சமூக ஊடகங்களில் ஏராளமான பதிவுகளை நீங்கள் பார்த்திருக்கலாம். செயற்கை நுண்ணறிவு வேலை வாய்ப்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது. உலக பொருளாதார மன்ற அறிக்கை என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்

முதலாவதாக, 2030 ஆம் ஆண்டுக்குள் சுமார் 170 மில்லியன் புதிய வேலைகள் உருவாக்கப்படும் என்று அறிக்கை கணித்துள்ளது. இருப்பினும், இதே கால அளவில், தோராயமாக 92 மில்லியன் பேர் வேலை இழக்க வாய்ப்புண்டு. கூட்டி கழித்துப் பார்த்தால், உலகில் 78 மில்லியன் நிகர புதிய வேலைகள் உருவாக வாய்ப்புகள் அதிகம்.

இவற்றில் ஐந்து வேலைகளில் ஆள்களுக்கான தேவைகள் சிறப்பான வளர்ச்சியைக் காணும். இதில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இலகுரக டிரக் அல்லது விநியோக சேவை ஓட்டுநர்கள், மென்பொருள் மற்றும் பயன்பாட்டு உருவாக்குனர்கள், கட்டிட வடிவமைப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் கடை விற்பனையாளர்கள் ஆகியவை அடங்கும்.

பல நாடுகள் மிகவும் நிலையான எதிர்காலத்திற்காக எடுத்துவரும் பசுமை முயற்சிகளால் விவசாயத் துறையில் வேலை செய்வோர் எண்ணிக்கை அதிகரிக்கும். இவற்றைத் தொடர்ந்து உணவு பதப்படுத்துதல் மற்றும் அதில் தொடர்புடைய தொழிலாளர்கள் கார், வேன் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் நர்சிங் நிபுணர்கள் உணவு மற்றும் பான சேவை ஊழியர்கள் செயல்பாட்டு மேலாளர்கள் சமூகப் பணி மற்றும் ஆலோசனை நிபுணர்கள் திட்ட மேலாளர்கள், பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி ஆசிரியர்கள் இடைநிலைக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு உதவியாளர்கள் இவர்களின் தேவை அதிகரிக்கும்.

பின்வரும் வேலைகள் அடுத்த பத்தாண்டுகளில் மிக வேகமாக வளரும் என்று அறிக்கை கூறுகிறது: செயற்கை நுண்ணறிவு மற்றும் பெருந்தரவுப் புரட்சி இதன் பின்னணியில் இருக்கும். பெருந்தரவு நிபுணர்கள், நிதி தொழில் நுட்ப பொறியாளர்கள், இயந்திர கற்றல் நிபுணர்கள், மென்பொருள் மற்றும் பயன்பாட்டு உருவாக்குநர்கள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை நிபுணர்கள் ஆகிய ஐந்து வேலைவாய்ப்புகள் வளரும். அதிக சம்பளம் பெறுகிறவர்களாக இவர்கள் மாறுவர்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 நண்பர்களுக்கிடையில் மதுபோதையில் தகராறு

## ஒருவர் பலி; மூவர் கைது

மட்டக்களப்பு, மார்ச்.16

மட்டக்களப்பு - வெல்லா வெளி பொலிஸ் பிரிவிலுள்ள சின்னவத்தை பிரதேசத்தில் நான்கு நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் உயிரிழந்ததாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நண்ப கல் இடம்பெற்றது.

வெல்லாவெளி சின்ன வத்தை பக்கியெல்ல பிரதேசத் தைச் சேர்ந்த 45 வயதுடைய வரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் நேற்று முன் தினம் நண்பகல் 12.00 மணியள வில் தனது 3 நண்பர்களுடன் இணைந்து சின்னவத்தை பகுதி யிலுள்ள வயல் பகுதிக்குச் சென்று ஒன்றாக மதுபானம் அருந்தி னார்.

இதன்போது, நான்கு நண்பர் களுக்கிடையிலும் தகராறு ஏற்பட்டது.

தகராறின் போது 3 நண்பர்க ளும் இணைந்து உயிரிழந்த நபரை பொல்லால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பியோடினர்.

இந்த நிலையில், குறித்த வயல் பகுதிக்கு சென்ற கிராம உத்தியோகத்தர் ஒருவர் அங்கு சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோ தனைக்காக மட்டு. போதனா மருத்துவமனையில் ஒப்படைத் தனர்.

பின்னர் பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட விசாரணை யில், சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(எ)

# எண்ணெய் பரல்களை கடத்தியவர் சிக்கினார்

## கல்முனை பொலிஸார் அதிரடி

கல்முனை, மார்ச்.16

கடை ஒன்றின் முன்பாக வைக்கப்பட்டிருந்த எண்ணெய் பரல்களை வாகனம் ஒன்றில் கடத்திய சந்தேக நபரை கல் முனை தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் கல் முனை தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள கல்முனை முஹ் யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் முன்பாகவுள்ள பலசரக்கு கடை ஒன்றில் கடந்த 13 ஆம் திகதி அதிகாலை எண்ணெய் பரல்கள் களவாடப்பட்டுள்ள தாக அதன் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டுக்க மைய பொலிஸார் விரைந்து செயல்பட்டு மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்ட பரல் கள் வாகனத்துடன் மீட்கப்பட் டன. அத்தோடு, சந்தேக நபர் ஒருவரும் கைதானார். தப்பிச் சென்றுள்ள இரு சந்தேக நபர்க ளையும் சி.சி.ரிவி காணொலி கள் மற்றும் ஏனைய தகவல்க ளின் ஊடாக பொலிஸார் விசேட தேடுதல் மேற்கொண்டு கைது செய்வதற்கான நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், குறித்த கொள்ளைச் சம்பவம் நடைபெற்று சந்தேக நபர் உட்பட களவாடப்பட்ட பொருட்களை சுமார் 7 மணித் தியாலங்களில் மீட்ட பொலிஸா ருக்கு பொதுமக்கள் பாராட் டுக்களை தெரிவித்தனர்.

(எ- 01)

# அரசியல் அதிகாரத்தின் வர்க்க...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், முறைமை மாற்றம் என்பதையும் புதிய கலா சாரம் என்பதையும் மக்கள் மாத்திரமல்ல, தேசிய மக் கள் சக்தியின் தலைவர்களும் கூட எவ்வாறானதாக விளங்கி வைத்திருக்கிறார்கள் என்பது தொடர்பில் சந்தே கம் எழக்கூடியதாக கடந்த ஆறு மாதகால அரசியல் மற்றும் ஆட்சிமுறை நிகழ்வுப் போக்குகள் அமைந்திருக் கின்றன.

இலங்கையில் புதிய அரசியல் கலாசாரம் என்பது வெறுமனே ஊழல் முறைகேடுகளும் அதிகார துஷ்பிர யோகமும் இல்லாத ஆட்சிமுறை என்று மாத்திரம் அர்த்தப்பட்டுவிடாது. சகல சமூகங்களையும் அவலத் துக்கு உட்படுத்திய மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த தேசிய இனப்பிரச்னைக்கு நியாயபூர்வ மான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காணவேண்டிய தேவையை தென்னிலங்கை மக்கள் உணரக்கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதும் அந்த புதிய அரசியல் கலாசாரத்தின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக இருக்க வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசி யல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் ஏற்றுக் கொள்கின்ற மனநிலை தென்னிலங்கை அரசியல் சமுதா யத்துக்கு ஏற்படாத பட்சத்தில் புதிய கலாசாரம் என்ப தில் எந்தவிதமான அர்த்தமும் இருக்கப்போவதில்லை. இதை தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் புரிந்து கொண்டதற்கான எந்த அறிகுறியையும் கடந்த ஆறு மாதங்களில் காணமுடியவில்லை.

பழைய அரசியல் அதிகார வர்க்கத்துக்கு காலங்கா லமாக சேவை செய்த அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டு பழைய ஒழுங்கை மாற்றுவதை நோக்கிய செயற்பாடுகளை ஒரு இடதுசாரிக் கட்சி முன்னெடுப்ப தில் உள்ள சிரமங்களை ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜே வி.பி.யின் தலை வர்களும் இதுவரையில் விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

உயர் சமூக வர்க்கங்களைச் சாராத பிரதிநிதிகள் என்ற வகையில் ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் மாற்றத்தை வேண்டி நிற்கும் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களின் எதிர்பார்ப்புகளையும் உணர்வுகளையும் மதித்துச் செயற்படக்கூடிய ஆட்சியா ளர்களாக தங்களால் மாறமுடியும் என்பதை இதுவரை யான செயற்பாடுகள் மூலமாக எந்தளவுக்கு நிரூபித்திருக் கிறார்கள் என்ற முக்கியமான ஒரு கேள்வி இருக்கிறது.

# வேலையைப் பிடுங்கிக் கொள்ளுமா செயற்கை...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு மாறாக, பல பாரம்பரிய ஆபீஸ் வேலைகள் வேகமாக குறைந்து வரும் வேலைகளின் பட்டியலில் இடம்பிடித்துள்ளன. தபால் சேவை ஊழியர்கள், வங்கி காசாளர்கள் மற்றும் உதவியாளர்கள், தரவு உள்ளீட்டு செயல்முறை ஆக்குநர், நிர்வாக உதவியாளர்கள் மற்றும் நிர்வாக செயலாளர்கள் ஆகியோர் இதில் அடங்குவார் கள். இந்த வீழ்ச்சியடைந்து வரும் போக்கால் மிகவும் பாதிக்கப்படும் மற்றொரு வேலை கிராஃபிக் டிசைனர். ஏ.ஐ உபயோகம் ஒவ்வொரு நாளும் அதன் மாயாஜா லத்தை புதிய உயரத்திற்கு உயர்த்துவதால், இந்த படைப்பு நிபுணர்களின் வேலை கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று அறிக்கை கூறுகிறது.

வேலையில் தேவைப்படும் திறன்களில் கிட்டத்தட்ட 40 சதவீத மாற்றம் ஏற்பட உள்ளது. ஏற்கனவே, 63 சத வீத முதலாளிகள் அதை தாங்கள் எதிர்கொள்ளும் முக்கி யமான தடையாக குறிப்பிடுகின்றனர். ஏ.ஐ. நம் வாழ்க் கையை இருண்டதாக மாற்றிவிடும் என்று எண்ண வேண் டாம். ஏனெனில், எதிர்காலத்தில் தேவையான மற்றும் விரும்பத்தக்கதாகக் கருதப்படும் திறன்களின் பட்டிய லில், முன்னணியில் இருப்பவை மனிதர்களுக்கே உரிய பின்வரும் திறன்களாகும். அதில் பகுப்பாய்வு சிந்தனை முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து மீள்தன்மை, நெகிழ்வுத்தன்மை, சுறுசுறுப்பு ஆகியவை வரும் ஆண்டு களில் தேவைப்படும் சில முக்கிய திறன்களாகும்.

மேலும் தலைமைத்துவம் மற்றும் சமூக செல்வாக்கு, படைப்பு சிந்தனை, ஊக்கம் மற்றும் சுய விழிப்புணர்வு கொண்டிருத்தல், தொழில்நுட்ப கல்வியறிவு, பச்சாதா பம் காட்டுதல், ஆர்வம், வாழ்நாள் முழுவதும் கற்றல், திறமை மேலாண்மை, சேவை நோக்குநிலை மற்றும் வாடிக்கையாளர் சேவை ஆகியவை முக்கிய திறன்களா கும். எனவே, வரும் ஆண்டுகளில் உலகளாவிய வேலை சந்தைப் புரட்சியின் ஒரு பகுதியாக இருப்பதற்கு நம்மை நாமே மேம்படுத்திக் கொள்வது தான் ஒரே வழியாகும்.

பீதி தேவையில்லை. எல்லோரும் சொல்வது போல், ஏ.ஐ உங்கள் வேலையை எடுத்துக் கொள்ளாது, ஆனால், எவ்வாறு ஏ.ஐ-யை பயன்படுத்துவது என்று தெரிந்த ஒருவர் உங்கள் வேலையை எடுத்துக்கொள்ளலாம்.

(கேணல் ஹரிஹரன், தெற்காசிய பாதுகாப்பு விவகார வல்லுநர், சென்னை)

# அரசாங்கம் அதன் மந்தவேகத்துக்கு விளக்கம்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையை கொண்டிருக்கின்ற போதிலும், போதுமான பொருளாதார வளங்கள் இல்லாத காரணத்தாலும் செயல் பாட்டு முறைகளை மாற்றிக்கொள்வதற்கு தற்போதைய முறைமையும் நிருவாக இயந்திரமும் தயக்கம் காட்டுவ தன் காரணமாகவும் அரசாங்கம் இயங்க முடியாதாக இருக்கிறது. ஜனாதிபதி திசாநாயக்க பட்ஜெட் விவாதத் தின்போது பாராளுமன்றத்தில் இதை நேர்மையாக வெளிப்படையாகவே சொன்னார்.

பொலிஸ், இராணுவம், அரசியல் அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியவை மேற்தளத்தில் செயற்படுவதை நாம் காண்கின்ற அதேவேளை, சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அமைப்புக்களுடனும் பாதுகாப்பு படைகள் மற்றும் சட்டத்துறையினருடன் உறவுகளைக் கொண்ட ஆயுதபாணிகளான பாதாள உலக குழுக்களின் கட்ட மைப்பு ஒன்று அடிப்புறத்தில் இயங்குகிறது. இந்த நிழல் அரசு நிர்மூலம் செய்யப்பட வேண்டும். இந்த பிரச்னை யைக் கையாளுவதற்கு இரு அணுகுமுறைகளே இருக் கின்றன. கிறிமினல் பாதாள உலகத்தவர்களுடன் இசைந்து செயற்பட வேண்டும் அல்லது அவர்களை தீர்க்கமான முறையில் முற்று முழுதாக ஒழித்துக்கட்ட வேண்டும். குற்றச்செயல்களை திட்டமிட்ட முறையில் செய்யும் குழுக்களுடன் சகவாழ்வு நடத்திய முன்னைய அரசாங்கங்களை போலன்றி, தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் அதை முற்றாக ஒழித்துக்கட்ட உறுதி பூண்டி ருக்கிறது.

தேர்தல்களை நடத்துவதில் அக்கறை காட்டுவதை விடுத்து கடந்தகால குற்றச்செயல்களுக்கு பொறுப்புக்கூ றலையும் நிலைமாறுகால நீதியையும் கோருவதற்கு முன்னுரிமை கொடுக்கும் பங்களாதேஷ் போராட்டத் தலைவர்களைப் போலன்றி இலங்கையின் புதிய அரசாங் கம் இரு மாத காலத்துக்குள் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு உறுதிபூண்டிருக்கிறது. அரசியலமைப்பு ரீதியான ஆணையின் பிரகாரமும் முன்னைய அரசாங் கம் அலட்சியம் செய்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் தீர் மானத்தை அரசாங்கம் எடுத்தது. ஆனால், முக்கியமான அரசியல் நகர்வு ஒன்று ஏற்பட்டதற்கு பின்னர் தேர்தலை நடத்துவதில் ஒரு ஆபத்து இருக்கிறது.

அவலப்படுகின்ற குடும்பங்களுக்கு பொருளாதார நிவாரணங்களை வழங்குவதாகவும் ஊழலுக்கு பொறுப் பானவர்களை நீதியின் முன்னிறுத்துவதாகவும் நாட்டு மக்களுக்கு வழங்கிய முக்கியமான வாக்குறுதிகளை புதிய அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றவில்லை. இனப் பிரச்னையையும் பௌத்த சமூகத்தவர்கள் வாழாத பகுதி களில் பௌத்தமத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப் பதன் விளைவாக தோன்றிய பிரச்சினைகள் போன்ற மதரீதியான மனக்குறைகளையும் அரசாங்கம் கையாள வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. வாக்காளர்கள் பொறுமை இழப்பார்களானால் அரசியல் உறுதிப்பா டின்மை திரும்பவும் ஏற்படக்கூடும். வாக்களிப்பதற்கு தீர்மானிக்கும்போது மக்கள் தொலைநோக்குடன் செயல் படவேண்டியது அவசியமாகும். முறைமை மாற்றத்துக்கு காலமெடுக்கும் என்பதை மக்கள் விளங்கி ஏற்றுக் கொள் ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையான்...

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் இந்நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன், முற்போக்கு தமிழர் கழக செயலாளர் யோகநாதன் றொஸ்மன் உட்பட குறித்த இரு கட்சிகளின் முக்கிய ஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## கனடாவின்...

பெற்றுள்ளார்.

தமிழர் உரிமைகளுக்காக நீண்ட காலமாக வாதிடும் ஆனந்தசங்கரி, இலங்கையில் போர்க் குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கும் இனப்படுகொலைக்கான பொறுப்புக் கூறலுக்கும் அழுத்தம் கொடுப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

கனடாவின் நீதித்துறை அமைச்சராக ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டது கனடாவிலும் உலகளவில் தமிழ் சமூகத்திற்கு ஒரு மைல்கல் ஆகும்.

ஈழத் தமிழ் பாரம்பரியத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மேற்கத்திய அரசாங்கத்தில் இவ்வளவு மூத்த பதவி வழங்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஏப்ரல்...

மில்லியன் ரூபாய் வரையில் கட்டுப்பணமாக பெறப்பட்டிருந்தது.

அவற்றில் 75 வீதத்துக்கும் அதிகமானவை மீள செலுத்தப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலுக்கான செலவு 11 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைப் போலவே உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிக்கான செலவு வரம்புகள் நிர்ணயிக்கப்படவுள்ளன.

இதனிடையே, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 35 முதல் 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் - என்றார். (அ)

## தமிழக...

மீனவர்களை அவர் சந்தித்து கலந்துரையாடினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த முறை இந்திய பக்தர்கள் பங்கேற்கவில்லை. இம்முறை பங்கேற்றிருந்தனர். கச்சதீவு திருவிழாவை எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இராமேஸ்வரத்தின் அனைத்து மீனவ கூட்டமைப்பின் தலைவர் ஜேசுராஜ் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டேன்.

இலங்கை, இந்திய மீனவர் பிரச்னையென்பது நீண்டகாலமாக நிலவும் பிரச்னை.இதற்கான தீர்வு தொடர்பில் நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இந்திய மீனவர்களை கைது செய்யவேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என நாம் நினைக்கவில்லை.

அதற்கான தேவைப்பாடும் எமக்கு கிடையாது. எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாலும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கடைப்பிடிப்பதாலுமே கைது செய்யப்படுகின்றனர்.

இந்திய மீனவர்கள் இழுவைப் படகை பயன்படுத்தி அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கடல் வளத்தை அழித்தால் இந்து சமுத்திரமே பாலைவனம் ஆகக்கூடும்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் இன்னும் மீண்டெழவில்லை. இந்நிலையில் தமிழக மீனவர்கள் அவர்களின் வளங்களை அழிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல - என்றார். (அ)

# அரச காணிகளைக் கையகப்படுத்திய அரசியல்வாதிகள் பட்டியல் சபையில்!

கொழும்பு, மார்ச் 16

பல்வேறு பயிர்ச் செய்கைத் திட்டங்கள் என்ற போர்வையில் அரசியல்வாதிகள், அவர்களது உறவினர்கள் மற்றும் அதிகாரிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தையும் அரசாங்க காணிகளையும் பெற்று, எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தாமல் தனிப்பட்ட பயன்பாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து 76 ஏக்கர் காணியை முன்னாள் அமைச்சர் சாலிந்த திசாநாயக்க தனிப்பட்ட முறையில் நிறுவிய நிறுவனத்துக்கு கையகப்படுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் நண்பர் ஒருவருக்கு குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான 21 ஏக்கர் வளமிக்க காணியைத் தரிசு நிலம் எனக் கூறி வழங்கியுள்ளதாகவும், அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் கைத்தொழில் அமைச்சர் தயாகமகேவின் மனைவி அனோமா கமகே, விவசாயத் திட்டத்திற்காக எனக் கூறி 140 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளதாகவும், ஆனால் அந்த நிதியைக் கொண்டு எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் செலவினத் தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு பயிர்ச் செய்கைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக 180 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டதாக சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.



மேலும் முன்னாள் அமைச்சின் செயலாளர் பந்துல விக்ரமாராச்சியின் மகனுக்கு பயிர்ச்செய்கை திட்டத்திற்காக 82 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

# கொள்கையில் இருந்து மாறியுள்ள அநுர அரசு!

## சபையில் நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு துறைமுக நகரத்துக்குச் சென்று தற்போதைய அரசாங்கம் கட்டுமானப்பணி ஒன்றுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்ததன் மூலம் அவர்களது கொள்கையில் இருந்து மாறியுள்ளமை வெளிப்படுவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சு மீதான வரவு - செலவு திட்ட விவாதம் நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற போது, அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் மேற்கண்ட விடயத்தை கூறினார்.

கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தியின் இரண்டாவது கட்டம் தொடர்பில், நல்லாட்சி காலப் பகுதியில் ஊழல்கள் பற்றிய விசாரணைகள் இடம்பெற்றன. தற்போதைய அரசாங்கமும் அது தொடர்பில் குற்றங்களை எழுப்பியிருந்தது.

ஆனாலும் பத்து - பதினைந்து வருடங்கள் கடந்தாலும், ஆமை வேகத்திலேனும் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

100 மில்லியன் பயணிகளுக்கு சேவை வழங்கும் இடமாக கட்டுநாயக்க விமான நிலையத்தை மாற்றி அமைக்கவேண்டும்.

கட்டுநாயக்கவின் இரண்டாம் கட்டம் வந்தாலும், மத்தளை, யாழ்ப்பாணம் போன்ற விமான நிலையங்களுக்கு பயணிகள் சேவையை மையப்படுத்தினால் பயணிகள் சேவை மூலம் வருவாயை அதிகரித்துக்கொள்ளலாம்.

இதன்மூலம் நாட்டின் விமான நிலையங்களை சாதாரணமாக 80 வீதத்துக்கும் அதிகமான பயணிகள் சேவையை வழங்குகின்ற இடமாக மாற்றிய மைக்கலாம் - என்றார். (அ)

# இந்த முறையும் சீனாவின் இலவச பாடசாலை சீருடை

கொழும்பு, மார்ச் 16

2026 ஆம் ஆண்டில் இலவச பாடசாலை சீருடைகளை வழங்க சீன அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வருடத்திற்கான மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடைகளின் முழுத் தேவையையும் சீனா மானியமாக வழங்க உள்ளதாக கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

அதன்படி, 10,096 அரசாங்க மற்றும் அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளுக்கும், 822 அங்கீகரிக்கப்பட்ட பிரிவேனாக்களுக்கும் இலவச பாடசாலை சீருடைத் துணி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. (அ)

## பளை...

கிளிநொச்சி நோக்கி பயணித்த லொறியும் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியுள்ளது.

இச்சம்பவத்தின் தொடர்புடைய லொறிச் சாரதி பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## கச்சதீவு திருவிழாவை...

மேற்கோள் காட்டி பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மூவாயிரம் பேர் பங்கேற்ற குறித்த திருவிழாவில் இரு நாட்டு அரசாங்கங்களும் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்பட்டுள்ளமை வரவேற்கதக்கதொரு விடயமாகும் என குறிப்பிட்டார்.

சமய நிகழ்வொன்றில் எந்தவித பிரச்னைகளும் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ள முடியுமாக இருந்தால் ஏன் இதனை மீனவர்கள் விடயத்திலும் அமுல்படுத்த முடியாது எனவும் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

எனவே, கச்சதீவு திருவிழாவை உதாரணமாகக் கொண்டு இருநாட்டு அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் சுமுகமான கலந்துரையாடல்கள் ஊடாக இந்திய - இலங்கை மீனவர் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (அ)

## மன்னார்..

ஒரு மறைமாவட்டத்தில் குரு முதல்வர் பதவி என்பது மறைமாவட்ட ஆயருக்கு அடுத்த நிலையில் உள்ள உயர் பதவியாகும்.

அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் 1997ஆம் ஆண்டு அன்றைய மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையினால் மன்னார் மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். (அ)

## அடுத்த...

நேற்று பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை வெளியிட்டார்.

இதேவேளை, சைப்ரஸில் உள்ள இலங்கை தூதரகம் மிக விரைவில் திறக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

# நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 16

எழுத்தாளர் தியா காண்டீபனின் அமெரிக்க விருந்தாளி நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு 18/2, திருவடிநிழல், அம்மன் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெறும்.

தலைமை உரையை சட்டத்தரணி சி.அ யோதிலிங்கம் நிகழ்த்துவார். நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும், கவிஞருமான தீபச்செல்வனும், விமர்சன உரைகளை புலோலியூர் வேல்நந்தன், குலசிங்கம் வசீகரன் ஆகியோர் நிகழ்த்துவர். முதற்பிரதியை நடமாடும் நூலகரான சண்முகலிங்கம் சஜிலன் பெற்றுக் கொள்வார்.

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் நூலாசிரியர் தியா காண்டீபன் ஏற்புரையை வழங்குவார்.

## கச்சதீவு...

யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜே.பி.ஜெப ரட்ணம் அடிகளார், நெடுந்தீவு பங்குத் தந்தை ஆகியோர் இணைந்து திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து வந்திருந்த பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட சுமார் 8 ஆயிரம் பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டனர்.( அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# இலங்கையர்களுக்கு மீளவும் தொழில் விஸா

## இத்தாலி அரசு இணக்கம்

கொழும்பு, மார்ச் 16

இலங்கையர்களுக்கு மறுபடியும் தொழில் விஸாக்களை வழங்குவதற்கு இத்தாலிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின்போது வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு இத்தாலி அரசாங்கம் விஸா வழங்குவதை நிறுத்தியிருந்தது. இத்தாலிய விசா தடை இலங்கைக்குப் பிரச்னையாகவே இருந்தது.

இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி இத்தாலி அரசாங்கம் விஸா தடையை நீக்கியதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சர் பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்-

இப்போது இத்தாலிய அரசாங்கம் எங்களுக்கு விஸா வசதிகளை வழங்குகிறது. தொழில் விஸாக்களை வழங்கும்போது சாரதி அனுமதிப்பத்திரங்கள் தேவைப்படுகின்றன. நாம் வழங்கும் சாரதி அனுமதிப் பத்திரத்தில் பல தொழிநுட்ப வேறுபாடுகள் காணப்படுவதாகக் கடந்த 11ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

சுமார் ஐந்து வகையான சாரதி அனுமதிப்பத்திரங்கள் காணப்படுவதால் இத்தாலி அரசாங்கத்தால் இவற்றை அடையாளம் காணுவதில் சிக்கல்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே இந்த ஐந்தையும் ஒரே முறையில் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடி இணக்கம் தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பில் கடந்த 11 ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. 13ஆம் திகதி அமைச்சரவைக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளோம். மேலும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கும் தகவல் தெரிவித்துள்ளோம் - என்றார்.

# நளீம் எம். பி. இராஜினாமா



கொழும்பு, மார்ச்.16

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். நளீம், நேற்று முன் தினம் சபையில் பிரியாவிடை உரை நிகழ்த்திய பின்னர், செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவிடம், அவரது அலுவலகத்தில் வைத்து தனது இராஜினாமா கடிதத்தைக் கையளித்தார்.

இதன்போது, கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர். (எ)

# ஏப்ரல் முதல் சம்பள உயர்வு

கொழும்பு, மார்ச் 16

வரவு-செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வுகளை ஏப்ரல் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் சிங்களப் புத்தாண்டை கொண்டாடும் வகையில், மாதச் சம்பளம் வழங்குவதற்கான வழக்கமான திகதிக்கு முன்னதாக ஏப்ரல் 10 ஆம் திகதி அவற்றை வழங்கவும் அரசாங்கம் தயாராகி வருகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பின்னர், ஒருவார காலப்பகுதியில் அதிகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊக்கத் தொகைகள் தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச ஊழியர்களின் குறைந்தபட்ச மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை 24250 ரூபாயிலிருந்து 40000 ரூபாவாக 15750 ரூபாயால் அதிகரிக்கவும் தற்காலிக இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் சிறப்புக் கொடுப்பனவுகளை அடிப்படை சம்பளத்தில் இணைக்கவும் வரவு - செலவுத்திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# தேசபந்துவின் மனைவியிடம் வாக்குமூலம் பெற்ற சி.ஐ.டி.!

கொழும்பு, மார்ச் 16

**பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன் னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக் கோனின் மனைவி மற்றும் மகனிடம், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.**

2023 ஆம் ஆண்டு, மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, மாத்தறை நீதவான் நீதிமன்றினால், கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாக இருப்பதனால், அவருக்கு எதிராக, மாத்தறை நீதவான் நீதிமன்றினால், கடந்த செவ்வாய்க்கிழமை, பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய, பொலிஸ் அதிகாரிகள், குழுக்களாக இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், தேசபந்து தென்னக்கோனின் மனைவி மற்றும் மகனிடம், கடந்த வியாழக்கிழமை, வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். (அ)

# கிளிநொச்சியில் 97 வீத காணிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் நிறைவு!

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் 97.2 சதவீதமான காணிகளில் கண்ணிவெடியகற்றல் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், போரினால் பாதிக்கப்பட்ட 37 குடும்பங்கள் மாத்திரமே இன்னும் மீள் குடியமர்த்தப்படாமல் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதேநேரம் ஓகஸ்ட் மாதமளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீள் குடியமர்த்த முடியும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை இன்று முதல் மக்கள் பார்வைக்கு!

கொழும்பு, மார்ச் 16

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை இன்று முதல் பாராளுமன்றின் அதிகாரபூர்வ இணையத் தளத்தில் பொதுமக்கள் பார்வையிட முடியும் எனச் சபாநாயகர் தெரிவித்துள்ளார்

இந்த விடயம் தொடர்பில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க கருத்துரைத்த பின்னரே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நேற்று முன் தினம் பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். இந்த அறிக்கை சட்ட மா அதிபருக்கு அனுப்பப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (அ)

# இசைப்பிரியாவுக்கும், கொல்லப்பட்ட தமிழ் பெண்களுக்கும் நீதி கிட்டுமா?

## சபையில் சாணக்கியன் கேள்வி

கொழும்பு, மார்ச் 16

அனுராதபுரம் வைத்தியசாலையில் பெண் வைத்தியருக்கு நிகழ்ந்த வன்கொடுமைக்கு நீதி வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், இந்த நாட்டில் இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட இசைப்பிரியாவுக்கு நீதி வழங்க ஏன் அரசாங்கம் முன்வரவில்லை என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். அதற்கு ஏன் இந்த அரசாங்கமும் நாட்டு மக்களும் நடவடிக்கை எடுப்பதற்கு கொந்தளிக்கவில்லை.

இனவாதம் இல்லை என்று சொல்லும் இந்த அரசாங்கம் தான் மோசமான இனவாதிகள்.

கடந்த கால அரசாங்கங்கள் தங்களை இனவாதிகளாக அடையாளப்படுத்திக் கொண்டு தமது செயல்பாடுகளை முன்னெடுத்தார்கள்.

ஆனால், இந்த அரசாங்கம் இனவாதம் இல்லை என கூறுகிறார்கள். ஆனால் முழுக்க முழுக்க இனவாதத்தில்தான் ஈடுபடுகிறார்கள். இசைப்பிரியா ஒரு பெண் இல்லையா? இசைப்பிரியாவுக்கு இந்த நாட்டில் நீதி தேவையில்லையா - என்றார். (அ)

# விலங்கு கணக்கெடுப்பு நிறைவடைந்தது

கொழும்பு, மார்ச் 16

தேசிய விலங்கு கணக்கெடுப்பு நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம் பித்து 8.05 மணிக்கு நிறைவடைந் தது.

தேசிய விலங்கு கணக்கெடுப்பு நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பித்து 5 நிமிடம் வரை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என விவசாய, கால்நடை வளர்ப்பு, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு அறிவித்திருந்தது.

அதன்படி, காலை 8:00 மணி முதல் 8:05 மணி வரை, ஒருவர் தனது தோட்டம், நிலம், புனித இடங்கள் மற்றும் பிற பொது இடங்களை 5 நிமிடங்கள் கண் காணித்து அந்த நேரத்தில் வளா கத்தில் இருக்கும் குரங்குகள், அணில்கள், மர அணில்கள் மற்றும் மயில்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து கணக்கெடுப்பு தாளில் பதிவு செய்ய வேண்டும் எனவும் அறிவித்திருந்தது.



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org